இலக்கிய
விமர்சன
குரல்

# எழுத்து


இலக்கிய சொற்பொழிவுகள் 98

இலக்கியத்தில் சோதனை 99
*நதாலி ஸாரெட்*

ஹல்லோ யார் அங்கே 101
*வில்லியம் ஸரோயன்*

சாவில் பிறந்த சிருஷ்டி 105
*மௌனி*

கவி நினைப்பு 110
*ஜே. எபி. ஸ்குயர்*

சித்தக் கடல் 111
*நவசித்தன்*

புத்தகங்கள் 119



மே 61

50 காசு

29

# எழுத்து

ஆசிரியர் : சி. சு. செல்லப்பா

மே 61...........ஏடு 29...........3-ம் ஆண்டு

எழுத்து ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல் தேதியன்று வெளிவரும் மாத ஏடு தனிப்பிரதி காசு 50 ஆண்டுச் சந்தா ரூ. 5-00 வெளிநாடு களுக்கு ரூ. 6-00 சந்தா, கட்டுரை சம்பந்தமான கடிதங்கள் எல்லாம் 'எழுத்து,' (Ezhutthu) 19-A, பிள்ளையார் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

தலையங்கம்

## இலக்கிய சொற்பொழிவுகள்

தமிழில் இலக்கிய கட்டுரைகள், பொதுவாக குறைவாக இருப்பதுபோலவே இலக்கிய சொற்பொழிவுகளும் கணிசமாக நடைபெறுகிறதில்லை என்று சொல்லலாம். இலக்கியப் போக்குகள் பற்றி ஒரு விதரணையான வாசகனோ ஆர்வம் காட்டும் ஒரு இளம் எழுத்தாளனோ தெரிந்துகொள்ள, கொஞ்சம் அந்த துறையில் விஷய ஞானம் கொண்டவர்கள் என்று கருதப்படுபவர்கள் வார்த்தைகளை கேட்கலாம் என்று எதிர்பார்த்து கேட்கப் போகிறான்.

மேல் நாடுகளில் இலக்கிய சொற்பொழிவுகள் அநேகமாக தயாரித்துக்கொண்டு வரப்பட்டவைகளாகத்தான் இருக்கின்றன. அவைகள் அந்த கூட்டத்தில் கேட்கப்பட்டதோடு நின்றுவிடாமல் பின்னர் கேட்காதவர்களும் படிக்கவும் ஏதுவாக அச்சடிக்கப்பட்டு புத்தக உருவமும் பெறுவது சகஜம். நமது வட்டத்தில் நடக்கும் ஒரு சில சொற்பொழிவுகளும் அப்படி இல்லை. மனதில் தயார்ப்பண்ணிக் கொண்டு வந்து சொற்பொழிவாளர் பேசுகிறார்கள்.

இதில் சில முக்யமான குறைகள் ஏற்படுகின்றன. சொற்பொழிவாளர் ஒரு சில ஆரம்ப அம்சங்களை மட்டும் பெரிதுபடுத்திச் சொல்லிவிட்டு தன் தலைப்பு விஷயத்தை முழுக்க கையாள முடியாமல் போய் விடுகிறது. இன்னும் ஒன்றிலேயே லயித்துப்போய் திசை தப்பியும் போய்விடுவதும் ஏற்படுகிறது. கேட்கப்போனவன் ஏமாற்றத்துடன் திரும்புகிறான்.

இந்த கருத்துக்களை சொல்ல ஏற்பட்டதுக்கு தூண்டுதலாக இருந்தது சமீபத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கம் (சென்னை) சார்பில் நடைபெற்ற இரண்டு சொற்பொழிவுகள். ஒன்று 'தமிழ் உரை நடை வளர்ச்சி' பற்றி பேராசிரியர் அ. மு. பரமசிவாநந்தம் பேசியது; மற்றது டாக்டர் ராசமாணிக்கனார் பேசிய 'தமிழில் பெருங்கதைகள்' என்பது.

உரைநடைபற்றிய சொற்பொழிவில் முக்கால் பங்கு உரை ஆசிரியர்களைப்பற்றி துளாவியதாக இருந்தது. 'தமிழுக்கு உரைநடையை தந்த பெருமை மேலை நாட்டாரையே சாரும். இந்த நூற்றாண்டில் உரைநடை சிறப்பாக வளர்ந்திருக்கிறது.' என்று சொல்லி விட்டு, திரு வி. க. போன்ற இரண்டொருவர் பெயர்களை போகிற போக்கில் கூறிவிட்டு இப்போது பலர் அழகான உரைநடைகள் எழுதுகிறார்கள் என்று சட்டென முடித்துவிட்டார் சொற்பொழிவாளர். அந்த சொற்பொழிவிலிருந்து இன்றைய உரைநடை பற்றி எதுவும் ஒருவன் தெரிந்து கொண்டிருக்க முடியாது.

பெருங்கதை, 'அதாவது நாவல் பற்றிய சொற்பொழிவும் தமிழ் நாவல் பிறப்பு, வளர்ச்சி, இன்றைய நிலைபற்றி வரலாற்று ரீதியாகவும் இல்லை, 'நாவல் போக்கு' சம்பந்தப்பட்டதாகவும் இல்லை. ஆரம்பமாக, பிரதாப முதலியார் பெயர் மட்டும் பிரஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் இவர்கள் எல்லாம் நல்ல தமிழில் நன்ருக எழுதுகிருர்கள் என்று நாலைந்து பெயர்கள் குறிப்பிடப்பட்டது. இதுக்குப் பிறகு நல்ல தமிழில் எழுதவேண்டும் என்ற கருத்து விவரித்து விளக்கப்பட்டது. நாவல் விஷயம் எங்கோ பின்னால் போய்விட்டது. சாதம்—சோறு, தாம்பத்யம்—இல்லறம், ஒருவள்—ஒருத்தி, இப்படி, தமிழ் வார்த்தைகள் இருக்க பிறமொழிச் சொற்களை உபயோகிப்பானேன், இலக்கணமாக எழுதவேண்டும் இப்படி, என்றெல்லாம் பாதை திரும்பிப் போய்விட்டது. இன்றைய நாவல் நிலை மதிப்பீடு உருவாகவே இல்லை.

இவ்வித உருவாகாத சொற்பொழிவுகளால் என்ன பயனுமில்லை. சொற்பொழிவாளர்கள் தங்களை தகுதிப் படுத்திக்கொண்டு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி பேச முன்வரவேண்டும். தகுதிப் படுத்திக் கொண்டவர்கள் எடுத்துக்கொண்ட பொருளை முறைப்படுத்திப் பேசவேண்டும். தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள் சத்தானவையாக இருக்கவேண்டும். இருக்கிறபோதுதான் சொல்கிறவன் கேட்கிறவன் இருவருக்கும் அதிலே ஒரு திருப்தி ஏற்படும்.

## தமிழுக்குப் பரிசு

ஏப்ரல் மாத இதழ் ஒன்றில் 'கல்கி' பத்திரிகை 'ஆர்.கே. நாராயணன் இங்கிலீஷ் நாவல்': தி: கைட்' என்பதற்கு சாகித்ய அகாடமி பரிசு அளித்த பின்னரும் அதை குற்றம் சொல்வது நியாயமில்லை, ஒரு தமிழர் பரிசு பெற்றிருக்கிறார், அது தமிழகமே பெற்ற பரிசாகும், என்று ஒரு உபதலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது. இது வேடிக்கையாக இருக்கிறது. விவாதத்தில் உள்ள விஷயம் வேறு, சாகித்ய அகாடமி கொடுக்கும் பரிசு அந்தந்த மொழியில் எழுதப்பட்ட சிறந்த நூலுக்கு என்ற அடிப்படையில் தரப்படுவது. மொழி இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதாக.

சா. அகாடமி பரிசு தமிழுக்கு கிடைக்கப் பெறுததை குறிப்பிடுகிறபோது தமிழ் இலக்கியத்துக்கு என்றுதான் பொருள்பட உரிமை கொண்டாடி சொல்கிறார்களே அன்றி ஒரு தமிழனுக்கு கிடைக்கவில்லையே என்ற நப்பாசை மனப்பான்மையால் அல்ல. ஆர். கே. நாராயணன் தமிழர்தான். அவர் நாவலும் தமிழ் வாழ்வு பற்றியதுதான். பரிசு கிடைத்ததுக்கு மகிழ்ச்சி. ஆனல் அந்த நூலுக்கு உரிய இலக்கியப் பெருமை இங்கிலீஷ் இலக்கியத்துக்குப் போய்ச் சேர்கிறது; தமிழ் இலக்கியத்துக்கு அல்ல. தமிழருக்குப் பரிசு என்பது வேறு, தமிழ் இலக்கியத்துக்குப் பரிசு என்பது வேறு. 'கல்கி' இரண்டையும் குழப்பிக் கொண்டு ஆத்மதிருப்தி கொண்டுவிட்டது!

நதாலி
ஸாரேட்

# இலக்கியத்தில் சோதனை

இலக்கியத்தில் 'சோதனை' என்ற வார்த்தை சகஜமாக உபயோகிக்கப்படுகிறது. அப்படி என்றால் என்ன என்று வாசகர்கள் திகைக்க ஏற்படுகிறது, விமர்சகர்கள் அதை திருப்பித் திருப்பி பொதுவாகச் சொல்கிற போது. தான் உத்தேசித்த. செய்த சோதனையை ஒரு படைப்பாளியே விளக்கினால் என்ன என்று நமக்கு சில சமயம் தோன்றுகிறது. ஹென்ரி ஜேம்ஸ் அதை விடாமல் செய்தார். இந்த கட்டுரை வெகு சிறப்பாக கருத்தாழம் கொண்டதாக ஒரு படைப்பாளியால் எழுதப்பட்டிருப்பது.

நதாலி ஸாரேட் ஃபிரஞ்சு நாவலாசிரியை. அவர் 'போர்ட்ரெய்ட் ஆஃப் எ மான் அன்னோன்', 'மார்ட்டெரியோ', 'பிளானிடேரியம்' ஆகிய நாவல்கள் எழுதியிருக்கிறார், அவர் 'டிராபிஸ்மெ' என்ற கட்டுரை நூலும் எழுதி இருக்கிறார். லண்டன் பி.பி.சி.யில் 'மூன்றாவது புரொகிராம்' என்ற நிகழ்ச்சி வரிசையில் பேசின பேச்சு அதன் 'லிஸனர்' பத்திரிகையில் வெளிவந்தது. எடுத்துத் தரப்படுகிறது, நன்றியுடன்.

*''புதிய நாவலாசிரியர்கள்' என்று அழைக்கப்படுபவர்களது நூல்கள் பெரும்பாலான விமர்சகர்களாலும் வாசகர்களாலும் ஒருவித சங்கடத்துடனும் வியப்புடனும் பார்க்கப்படுவதாக என்னிடம் சொல்கிறார்கள். அவர்களுக்கு நான் உறுதியாக சொல்ல முடியும், அவர்கள் வியப்பு இந்த புதிய நாவலாசிரியர்களிடம் இது எழுப்புவதைவிட அப்படி அதிகமானது இல்லை'*

*இந்த வியப்புக்கு எனக்குத் தோன்றுகிற முடிவான, சிறந்த காரணம், இந்த நாவலாசிரியர்கள் சோதனைக்காரர்கள், அவர்கள் நூல் ஆராய்ச்சிசாலை நூல்கள் என்று பரவியுள்ள புதிய கருத்துதான். ஏன் சோதனையானவை? அந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம்?'' 'சோதனை நாவலாசிரியர்கள்' என்பதுக்கு, எல்லா கலைஞர்களையும் போலவே அவர்களும், எவ்வளவு சிறந்ததாக இருந்தாலும் தங்கள் முன்னோடிகள் அல்லது உடன்காலத்தவர்களது அனுபவத்தை எல்லாம் பற்றி அக்கறை இல்லாமல், தங்கள் அனுபவத்தை, அது ஒன்றையே மட்டும் பற்றிக் கொள்கிறவர்கள் என்றால் அது நம்பிக்கை தரும். தங்களுக்கு சவுகர்யமாக இருந்த மூக்குக் கண்ணாடிகள் மூலம் மற்றவர்கள் பார்ப்பதைப் போல இல்லாமல் உண்மையை அணுகுகிறார்கள் அவர்கள் என்ற அர்த்தம் கொண்டாலும் பெரிய ஆறுதலாக இருக்கும். எல்லா கலைஞர்களும் எல்லா கலைகளிலும் எல்லா காலத்திலும் எப்பவும் செய்திருப்பது போலவே இந்த உண்மையை பிடித்து அடைக்க வடிவங்களை கண்டு பிடிக்க முயற்சித்தார்கள் அவர்கள் என்றாலும் எவ்வளவு ஊக்கம் அளிப்பதாக இருக்கும். இந்த நூற்றாண்டில் ஓவியத்தில் செய்திருக்கிறார்களே, உதாரணமாக, இம்ப்ரஷனிஸம், ஃபாவிஸம், கியூபிஸம், இப்படி அல்லது இசையில் 'சீரியல்' இசை அல்லது இலக்கியத்தில் ரொமாண்டிஸிஸம். ஸிம்பலிஸம், எக்ஸ்பிரஷனிஸம் இப்படி. 'சோதனை' என்ற சொல்லுக்கு, புதிய ஃபிரஞ்சு நாவல் இலக்கியத்தைப்பற்றி பேசும்போது, இதுவரை மற்றவர்களால் காணப்படாத உண்மையின் ஒரு அம்சத்தைப் பற்ற செய்யும் ஒருவித முயற்சியை வெளியிடுவது அந்த குறிப்பிட்ட உண்மை அம்சத்தை தொற்ற வைக்க ஒரு வடிவத்தை கண்டுபிடிப்பது என்ற அர்த்தம் கொண்டால் அது உண்மையில உற்சாகம் தரக்கூடியது. இந்த எழுத்தாளர்கள் தங்கள் நூல்களுக்கு தலைசிறந்த பரிசுகளை எதிர்பார்க்கலாம்.*

*ஆனால் அது அப்படி இருக்காது என்று எனக்கு நிச்சயம். ஒரு சாமான்ய விமர்சகன் அல்லது வாசகனின் அபிப்பிராயம் பற்றி அதீத நம்பிக்கை வைத்து ஒரு கருத்தாக இருக்கும் அது. எனவே அவை வேறெதோ அர்த்தத்தில்தான் இருக்கவேண்டும். விஞ்ஞானிகள் விஞ்ஞான விஷயங்களில் செய்கிற மாதிரி நாவலைப் பற்றிய கருத்துக்களை வளர்த்துக் கொண்டு பிறகு அந்த கருத்துக்களை இலக்கியத்தில் பிரயோகித்துப் பார்க்க முடியுமா என்று சிறு அளவில் பரீட்சை பார்க்கும் வரட்டு கோட்பாட்டுக்காரர்கள் என்றுதான் அவர்கள் கருதுவதாக நான் வருத்தத்துடன் சந்தேகிக்கிறேன். இந்த சோதனைகள் மற்றவர்களுக்கு ஒரு வேளை பயன்படலாம். அவர்கள், பிறகு, துணிச்சலான இந்த முன்னோடிகளின் தியாகத்துக்குப் பிறகு, அவர்கள் தங்களுக்காக தயாரித்திருந்த அந்த கருவிகளை தங்கள் ஆராய்ச்சி சாலைகளில் பயன்படுத்த முடியும். தங்கள் உண்மையான, உயிர்ப்புள்ள, வளமான அனுபவத்துக்கு உபயோகித்து நிஜமான, வாழும் நாவல்களை எழுத முடியும்.*

*அவர்கள் நினைக்கிறது இதுதான் என்று நான் பயப்படுகிறேன். நாவலைப் பற்றிய பொதுப்படை கருத்துக்களை எடுத்துச் சொல்லி அந்த வாசகர்கள் கருத்து தவறு என்று விளக்க முயல்வதில் பிரயோசனம்? மனப்பூர்வமான, மனமயக்கம் கொள்ளாத வாசிப்பைத் தவிர இந்த விஷயத்தில் யாருக்கும் வேறு எதாவது மனதில் படவைக்கும் என்றால், இந்த நூல்கள் எந்தவிதமாக எழுதப்பட்டன என்பதை உள்ளிருந்து காட்டுவதைத் தவிர வேறு எதாலும் அதிகம் படவைக்க முடியாது. இதை எழுத்தாளன் ஒருவன்தான் செய்ய முடியும், சிரமமாக இருந்தாலும். இலக்கிய கருத்துக்களை ஆராய்ச்சி சாலை சோதனைக்கு உட்படுத்துவது என்பதிலிருந்து எவ்வளவு நான் தள்ளி இருந்திருக்கிறேன் என்பதை நான் கடைப்பிடித்த முறைமூலம் காட்ட முயல்வேன்.*

*1933ல் நான் எழுத ஆரம்பித்தபோது, கோட்பாடுகளை பிரயோகிக்க அல்ல. சில விஷயங்கள் எனக்குள் ஆர்வத்தையும் விருப்பத்தையும் எழுப்பி விட்டு அவைகளை பிறருக்குசொல்லவும் தூண்டின,*

இந்த விஷயங்களால் ஏற்பட்ட ஒருவித தீவிர உணர்ச்சியை வெளியிடத்தான். இங்கு நான் ஒன்றை மறைக்காமல் சொல்லியாக வேண்டும். ஏதோ ஒரு ரம்யமான காலையில் ஒரு இளம் பறவை பாட ஆரம்பிக்கிறமாதிரி நானும் இந்த குறிப்பிட்ட நூலை எழுத உட்கார்ந்தேன் என்பதில்லை. என் கவனம் கிளறப்பட்டது, என் ஆர்வம் இந்த குறிப்பிட்ட விஷயத்தால் கவரப்பட்டது. வேறெதாலும் இல்லை. முதலில், ஒருவித உள்ளுணர்வான இயக்கம், ஒருவித மனித நடத்தை, மனித உறவு இவைகளை சுருக்கென உணர்வது எனக்கு இயல்பு.

ஆனால் ஒன்று தெளிவு. வேறொரு காலத்திலோ சமுதாயத்திலோ—உதாரணத்துக்கு இன்றைய சோவியத் ரஷ்ய சமுதாயம்—நான் வாழ்ந்திருந்தால் உண்மையின் இந்த அம்சத்தில் அவ்வளவு அக்கறை நான் கொண்டிருக்கமாட்டேன். கொண்டிருந்திருந்தாலும் இந்த குறிப்பிட்ட அனுபவத்தை தொற்ற வைக்க வகை கண்டிருக்கமாட்டேன். சில விஷயங்களை உணரவும் மொத்தமாக கலந்து கிடக்கும் மற்ற விஷயங்களிலிருந்து அவைகளை பிரித்து தனிப்படுத்த முயலவும் எனக்கு முடிந்திருக்கிறது. ஏனென்றால் என் புலச்சுரணை (ஸென்ஸிபிலிட்டி) சில நூல்களால் பண்பட்டிருக்கிறது, என் ஆர்வமும் விழிப்பு பெற்றிருக்கிறது. அந்த புத்தகங்களை ஒரு தனி விதமாக நான் படித்திருக்கிறேன். ஒருவித நோக்குடன் அவைகளை பார்த்திருக்கிறேன். டாஸ்ட்டாவ்ஸ்கி, பிரவுஸ்ட், ஜாய்ஸ், வெர்ஜீனியா உல்ஃப் இவர்களை படித்திருக்கிறேன். இந்த ஆசிரியர்களிடம் நான் கண்டது அவர்கள் சொன்ன கதைகளோ அவர்கள் காட்டிய கதா பாத்திரங்களோ இல்லை, ஆனால் ஒரு மூலப்பொருள்; அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்து உரித்தான ஒரு விஷய சத்து. வேறெந்த ஒரு எழுத்தாளனிடமும் காண முடியாதது. ஏற்கெனவே, இன்னமும் விடாத, ஒரு வலுவான துணிபு, என் ஒரே தீவிர அசைக்க முடியாத கோட்பாடு எனக்கு உண்டு—இலக்கியம், மற்றெந்த கலையையும் போலவே ஒரு இடையறுத இயக்கம், புதிய, தெரியவந்திராத பொருள்களை விடாது கண்டு பிடிப்பது என்ற நம்பிக்கைதான். தெரிந்தவைகளிலிருந்து தெரியாதவைகளைத் தேடும் ஒரு இயக்கத்தில் எனக்கு உறுதியான நம்பிக்கை. இந்த நம்பிக்கை நடப்பில் வெளிவிளக்கம் கொண்டது ஒரு எழுத்தாளன் சில விஷயங்களிடம் கொள்கிற மருள் எனக்கு ஏற்படவில்லை. இந்த மருள்தான் இந்த விஷயங்களை மற்றவர்களிடம் காட்ட விரும்பச் செய்கிறது அவனை, நான் சொல்லக்கூடிய யதார்த்தம் நான் மதிக்கும் டாஸ்ட்டாவஸ்கி, பிரவுஸ்ட், வெர்ஜீனியா உல்ஃப், ஜாயிஸ் ஆகியோர் ஏற்கெனவே வெளியிட்டு வெகு வலுவாக வர்ணித்தும் இருப்பவைகள் ரகத்தைச் சேர்ந்ததாக இருக்கிறபோது எனக்கு இந்த மருள் ஏற்படவில்லை. நான் முதலில் கிரகிக்க முயற்சித்த அந்த இயக்கங்களால் மருள் அடைந்தேன் என்றால், ஒரு கற்பனை வாசகனும் அதே நிலை அடைய விரும்பினேன் என்றால் முக்கியமாக இதனால்தான்; என் மனதில் பதிந்த ஒன்று உண்டு—ஒருவேளை பிரமையோ—இந்த இயக்கங்களை மற்றவர்களால் கவனிக்கப்படவில்லை, அவைகளை வெளிப்படுத்தத்தக்க ஒரு வடிவத்தை கண்டு பிடிக்கவேண்டிய அவசியம் இருந்தது என்பது தான்.

இந்த இயக்கங்கள் எவை என்பதை விளக்குவது கடினம். அவைகளை 'டிராபிஸம்' (Tropisms) என்று பிராணிநூல் சொல் தொடர்வழியில் அழைக்கலாம் என்று நினைத்தேன். ஏனெனில் அவை பிறவியோடு இயற்கையாக தோன்றுபவை. மற்றவர்களாலும் வெளி உலகாலும் நமக்குள் எழுப்பப்படுவது. 'டிராபிஸம்' என்று சொல்லப்படுகிற இந்தஇயக்கங்கள், ஒளி, உஷ்ணம் இவைகளால் ஏற்படும் சிலவித பாதிப்புகளால் உயிர்ப் பொருள்கள் விரிகிறதும் சுருங்குகிறதுமாக இருக்கிற இயக்கங்களை ஒத்து இருக்கின்றன. இந்த இயக்கங்கள் நமது பிரக்ஞையின் விளிம்பைச்சுற்றி விரைவாக வழுக்கிச் செல்கின்றன. நமது செய்கைகள், சமிக்ஞைகள், நம் வார்த்தைகள், நமது வெளிப்படையாகத் தெரிய வந்த, தெளிவான உணர்ச்சிகள் இவைகளுக்கு அடியில் மறைந்துகிடக்கும் சிறிய. வேகம் கொண்ட மிக சிக்கலான விருவிருப்பு நிகழ்ச்சிகளையும் உருவாக்குகின்றன.

எப்படி நான் சிறப்பாக இதை விளக்குவது?

சில ஆண்டுகளுக்கு முன் ஃபிளாபேர் கடிதங்களை படித்துக்கொண்டு இருந்தபோது, நாம் ஒன்றை சொல்கிறபோது அதை எந்த உண்மையானஅர்த்தத்தில் சொல்கிறோம் என்று அவர் பிரமித்ததை படித்த ஞாபகம் வருகிறது. ஒருவர் மற்றொருவருக்காக உணரும் 'டி லா ஸிம்பதி' என்கிறோமே அனுதாபம், அதை உணர்கிறேன். நமது பிரக்ஞையின் மட்டத்துக்கு தெளிவான அங்கீகாரம் ஏறுமுன்பு நமக்குள் ஏற்படுகிற ஒரு செய்கை, நாம் கொள்ளும் பல்வேறு அசைவுகள் தான் 'டிராபிஸம்'கள் என்று நான் நினைக்கிறேன். ஒருவருக்காக அனுதாபம்—மனக்கவர்ச்சி என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள்—நான் உணர்கிறேன். அம்மாதிரி செய்கைகள் ரொம்பவும் துரிதமானவை. குறிப்பானவை. அவைகளை சினிமாவில் ஆபரேடர் படம் பிடிக்க விரும்பும் பொருளின் நகர்தலுக்கு ஒத்து காமிராவும் நகர்கிறதே, அந்த பிரயாணத்துக்கு ஈடான ஒரு முறை மூலம் நாம் காட்டவேண்டி இருக்கிறது. இந்த ரொம்ப நுட்பமான அசைவுகளை பிடித்து வைக்க ஏதுவாக நான் பல அமைப்புகளை செய்யவேண்டி இருந்தது. பிறகு ஒரு மெது—ஓட்ட படமாக வாசகர்களுக்கு காட்டவேண்டி இருந்தது.

கவிதையில் செய்வது போல நடையின் ஒத்திசை மூலம் அவைகளை நான் வெளியிடவேண்டி இருந்தது. அவைகளை சொற்களில் வடிப்பது முடியாத காரியம் ஆதலால், நான் படிமங்களை கண்டு பிடிக்க முயலவேண்டி இருந்தது. அவைதான் வாசகனுக்கு, தெளிவான, அவை என்ன என்று அறியாமலே இந்த 'டிராபிஸம்'கள் கதாபாத்திரத்திடம் ஏற்படுத்திய உணர்ச்சிகளையும் மனப் பதிவுகளையும் உணர்த்த முடியும். 'டிராபிஸம்கள்' என்ற நூலை நான் எழுதியபோது. இந்த முதல் நூலை நான்எழுதி முடித்து வெகு பின்னால், அந்த மறைக்கப்பட்ட வெளியிடப்படாத உணர்ச்சிகள் ஏதாவது ஒரு

(தொடர்ச்சி 117-ம் பக்கம் பார்க்க)

# வில்லியம் ஸரோயன்

# ஹல்லோ யார் அங்கே

**ஓரங்க நாடகங்கள் தமிழில் இன்னும் பெருக வில்லை. கு. ப. ரா., பிச்சமூர்த்தி, சிதம் பரசுப்ரமண்யன் ஆகியோரது முயற்சிகள் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வளர்க்கப்பட வில்லை. இங்கு தரப்படும், அமெரிக்க நாவல், சிறுகதை, நாடகாசிரியர் வில்லியம் ஸரோ யன் நாடகம் தீவிரமானதாகவும், சக்தியுட னும் அழகுடனும் அமைந்திருக்கிறது.**

*(ஒரு சிறு-நகர சிறை அறையில் ஒருவன் இருக் கிறான். ஒரு ஸ்பூனால் தரையில் லேசாக தட்டிக் கொண்டு வார்த்தைகளை தந்தி அடிக்க முயற்சிக் கிறவன் மாதிரி அரைநிமிஷம் தட்டிவிட்டு எழுந்து அறையைச் சுற்றி நடக்க ஆரம்பிக்கிறான். கடைசி யில் நிறுத்தி அறை மத்தியில் நிற்கிறான். வெகுநேரம் நகரவில்லை. தன் தலை காயப்பட்டதுபோல் அவ னுக்கு ஒரு உணர்வு ஏற்படுகிறது. அவன் சுற்றிப் பார்க்கிறான். உலகத்தை......பார்த்து......அவன் திடீரென கத்திக் கூப்பிடுகிறான்.)*

**வாலிபன்:** *ஹல்லோ—யார் அங்கே! (தயக்கம்) ஹல்லோ—யார் அங்கே! ஹல்லோ—யார் அங்கே (நீண்ட தயக்கம்) யாரும் இல்லை அங்கே? (இன்னும் திடீரென ஆனால் அதிக விளையாட்டாகவும்)*

*ஹல்லோ—யார் அங்கே! ஹல்லோ—யார் அங்கே!*

*(ஒரு பெண் குரல் கேட்கிறது, இளமையாகவும் மிருதுவாகவும்)*

**குரல்:** *ஹல்லோ.*

**வாலிபன்:** *ஹல்லோ—யாரது?*

**குரல்:** *ஹல்லோ.*

**வா;** *கேட்டி, நீயா?*

**குரல்:** *இல்லை—இங்கே இருக்கிறவள் எமிலி.*

**வா;** *யாரு? (வேகமாக) ஹல்லோ-யாரது?*

**கு:** *எமிலி.*

**வா:** *யாரு எமிலி? எமிலி என்கிற பெயருள்ள யாரையும் எனக்குத் தெரியாது. மூணு வருஷத் துக்கு முந்தி ஸாலினாஸ்ஸில் ஸாம்ஸ் இடத்தில் நான் சந்தித்த அந்த பெண்ணா நீ?*

**கு:** *இல்லை—இங்கே சமைக்கிற பெண் நான். சமயக்காரி. நான் ஸாலினாஸ்ஸுக்கே போன தில்லை. அது எங்கே இருக்கு என்கிறதும்கூட தெரி யாது எனக்கு.*

**வா:** *ஹல்லோ யாரது. நீ இங்கே சமைக்கிற வள் என்று சொல்கிறே?*

**கு:** *ஆமாம்.*

**வா;** *சரி, நீ ஏன் படித்து விட்டு சமைக்க கற் றுக்கொள்ளக்கூடாது? ஹெல்லோ'வோ நல்லதாக எதுவும் ஏன் எனக்கு கிடைக்கிறதில்லை?*

**கு;** *அவர்கள் சொல்கிறபடி நான் சமைக் கிறேன், அவ்வளவுதான். (தயக்கம்) நீ தனியாக இருக்கிற நினைப்பா உனக்கு?*

**வா:** *ஓநாய்மாதிரி தனியாக. நான் கத்துவது தெரியவில்லை? ஹல்லோ யார் அங்கே?*

**கு:** *யாருக்காக இப்படி கத்துகிறாய்?*

**வா:** *சரி—யாருக்காகவும் இல்லை, தோன்று கிறது எனக்கு. கடிதம் எழுத யார் பெயராவது நினைத்துப் பார்க்க முயற்சிக்கிறேன். யார் பெய ருமே நினைப்புக்கு வரவே இல்லை.*

**கு:** *கேட்டியைப்பற்றி என்ன?*

**வா:** *கேட்டி என்கிற பெயருள்ள யாரையும் தெரியாதே எனக்கு.*

**கு:** *அப்போது ஏன் நீ 'நீயா கேட்டி' என்று கேட்டாய்?*

**வா:** *கேட்டி என்கிறது நல்ல பெயர். கேட்டி மாதிரி பெயரில் எனக்கு எப்பவுமே பிரியம். இருந் தாலும் கேட்டி என்கிற யாரையும் எனக்குத் தெரி யாது.*

**கு:** *எனக்கு தெரியும்.*

**வா:** *யெ! எப்படி இருப்பாள்? உயரமான பெண் அல்லது சின்னவளாக?*

**கு:** *நடுத்தரமாக இருக்கும்.*

**வா:** *ஹல்லோ அங்கே இருக்கிறவளே, நீ பார்க்க எப்படி இருப்பாய்?*

**கு:** *ஓ, எனக்குத் தெரியாது.*

**வா:** *யாரும் உன்னிடம் அதை சொல்லவில்லை? யாரும் அந்த விதமாக உன்னிடம் ஒருபோதும் பேசி னதே இல்லை?*

**கு:** *எந்தவிதமாக?*

**வா:** *உனக்குத் தெரியுமே. அவர்கள் பேசின தில்லை?*

**கு:** *இல்லை, அவர்கள் பேசினதே இல்லை?*

**வா:** *ஹா, முட்டாள்கள்—அவர்கள் பேசி இருக்கவேண்டும். உன் குரலிலிருந்தே நீ நன்றாக இருப்பவள் என்று நான் சொல்ல முடியும்.*

**கு:** *நான் இருக்கலாம், இல்லாமலும் இருக்க லாம்.*

**வா:** *நான் இதுவரை தவறினதில்லை.*

**கு:** *யெ, எனக்கு தெரிகிறது. அதுதான் நீ ஜெயிலுக்குள் இருக்கிறாய்.*

**வா:** *முழு விஷயமும் தப்பு.*

**கு:** *பலாத்காரம் என்று அவர்கள் சொல்கிறார் கள்.*

**வா:** *இல்லை—அப்படி இல்லவே இல்லை.*

**கு:** *அதுதான் என்று அவர்கள் சொல்கிறார் கள்.*

**வா:** *எல்லாரும் முட்டாள்கள் அவர்கள்!*

**கு;** *சரி, நீ சங்கடத்தில் அகப்பட்டுக்கொண் டது நிச்சயம். உனக்கு பயமா?*

**வா:** *சாகும்படியாக பயம். (திடீரென) ஹல் லோ யாரரது?*

**கு:** *ஏன் இதையே விடாமல் சொல்லிக் கொண்டிருக்கிறாய்?*

வா: நான் தனியாக இருக்கிறேன்—ஒரு ஓநாய் மாதிரி தனிமையாக. (நீட்டி) ஹல்லோ—யார் அங்கே!

(பெண் ஒருபக்கமாக தோன்றுகிருள். சாதா உடையில் சாத்வீகமான பெண்).

பெண்: நானும் ஒரு விதத்தில் தனிமை அனுபவிப்பவள்தான்.

வா: (திரும்பி அவளைப் பார்த்து) ஹேய், பரிகாசம் இல்லையே? பண்ணுகிருயா என்ன?

பெண்: அநேகமாக ஒரு ஓநாய் மாதிரிதான் நானும் தனிமையாக இருக்கிறேன்.

வா: எதனுலே இப்படி தனிமையாக இருக்கே?

பெ: எனக்கே தெரியாது.

வா: எனக்கும் அப்படியேதான். இந்த மாதிரி இடத்தில் உன்னை அவர்கள் அடைத்த உடனே உனக்கு அறிமுகமான பெண்கள், உனக்கு அறிமுகம் ஆகாத பெண்கள் எல்லோரையும் நீ ஞாபகப் படுத்திக்கிருய். நிச்சயமாக தனிமை படுகிறது.

பெ: அப்படித்தான் என்று நான் அடித்துச் சொல்வேன்.

வா; ஆ. அது மகாமோசம். (தயக்கம்) நீ அழகான குட்டி. உனக்குத் தெரியுமா அது?

பெ: பேச்சுக்கு சொல்கிருய்.

வா: இல்லை பேச்சுக்காக சொல்லவில்லை—நீ அழகுதான். எந்த முட்டாளுக்கும் அது படும். உலகம் பூராவிலும் அழகான ஒரு குட்டிக்கு கொஞ்சம் மேலே நீ.

பெ: நான் இல்லை—உனக்கு அது தெரியும்.

வா: இல்லை—நீ அழகிதான். என் பிறவி நாட்கள் முழுதும், இவ்வளவு ஊர் சுற்றினதிலே இதைவிட அழகான ஒருத்தியை நான் பார்த்ததே இல்லை. டெக்ஸாஸ் எனக்கு அதிர்ஷ்டத்தை தரும்.

பெ: அதிர்ஷ்டத்தையா? நீ இருக்கிறது சிறை, இல்லையா? ஒரு ஆள் கூட்டமே உனக்கு எதிராக எழுந்து இருக்கு, இல்லையா?

வா; ஆ, அதெல்லாம் பிரமாதம் இல்லை. நான் இதிலே இருந்து வெளியேறிவிடுவேன்.

பெ: இருக்கலாம்.

வா: இல்லை. எனக்கு எல்லாம் சரியாகப் போச்சு—இப்போது.

பெ: இப்போது—என்ன அர்த்தம் அதுக்கு?

வா: உன்னை பார்த்தபிறகு என்கிறதுதான். எனக்கு புதுசாக எதோ கிடைத்திருக்கு. இது அது என்று நான் கவலையே படவில்லை என்கிறது உனக்கு கொஞ்சநேரத்தில் தெரிந்திருக்குமே. அசதியாக இருக்கு. (தயக்கம்) காலம் பூராவும் எல்லாத்திலும் உயர்ந்ததுக்கு முயற்சி செய்து அதை அடையவே முடியாததில் ஏற்படும் அசதி. (திடீரென) ஹல்லோ, யாரங்கே?

பெ: இப்போது யாரை நீ கூப்பிடுகிருய்?

வா: உன்னைத்தான்.

பெ: ஏன், நான் இங்கேயே இருக்கேனே.

வா: தெரியும். (கூப்பிடுகிருன்) ஹல்லோ யாரங்கே!

பெ: ஹல்லோ.

வா: ஆ, நீ இனியவளாக இருக்கிருய். (தயக்கம்) நான் உன்னை மணந்துக்கப் போகிறேன். உன்னுேடு கூடவே புறப்பட்டு விடுவேன். நான் ஃபிரான்ஸிஸ்கோ அல்லது அதுமாதிரி ஏதாவது ஒரு இடத்துக்கு உன்னை நான் அழைத்துப்போவேன். கொஞ்சம் பணம் நான் ஜயிக்கப் போகிறேன். ஜாக்கிரதையாக பார்த்து சில 'ஜயிப்பு'களாக பொறுக்குவேன். நமக்கு நிறைய பணம் கிடைக்கும்.

பெ: யெ!

வா: யெ. உன் பெயர், மற்றதெல்லாம் சொல்லு எனக்கு.

பெ: எமிலி.

வா: அது தெரியும் எனக்கு. பாக்கி எல்லாம் என்ன? நீ எங்கே பிறந்தாய்? சொல்லு வா, முழு விஷயத்தையும்.

பெ: எமிலி ஸ்மித்.

வா: கடவுளுக்குப் பொதுவாக?

பெ: ஆமாம். அதுதான் என் பெயர்—எமிலி ஸ்மித்.

வா: ஆ, உலகத்திலேயே இனிமையான பெண் நீ.

பெ: எதனுலே?

வா: எதனுலேயோ, எனக்குத் தெரியாது. ஆனுல் நீ அப்படித்தான் இருக்கிருய், அவ்வளவுதான். நீ பிறந்தது எங்கே?

பெ: மாட்டடார், டெக்ஸாஸ்.

வா: அது எங்கே இருக்கு?

பெ: இதேதான்.

வா: இதுவா மாட்டடார், டெக்ஸாஸ்?

பெ: யே, இதுதான் மாட்ட: டார். வீலிங்கிலிருந்து உன்னை அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிருர்கள்.

வா: நான் இருந்தது அங்கோ, வீலிங்?

பெ: நீ இருந்த ஊர் கூட தெரியவில்லையா உனக்கு?

வா: எல்லா டவுனும் ஒரே மாதிரிதான் இருக்கு. போய் யாரோ ஒருவரிடம், நீ இருக்கிறது எந்த ஊர் என்று நீ கேட்கிறதில்லையே. அதனுலே பாதகமில்லை. வீலிங் எவ்வளவு தூரம்?

பெ: பதினுறு பதினேழு மைல். உன்னை அவர்கள் கொண்டு வந்ததே தெரியாது உனக்கு?

வா: எப்படித் தெரியும் எனக்கு, நான் சுமராணை தப்பின பிறகு? யாரோ, ஒரு ஈயக்குழாய் வேறெதையோ கொண்டு மண்டையில் அடித்தார்கள். எதுக்காக என்னை தாக்கி அடித்தார்கள்?

பெ: கற்பழித்தல் — அவர்கள் சொன்னது அது.

வா: ஆ, அது பொய். (தனக்குள் திகைத்து) பணம் கொடுக்கச் சொல்லி என்னை கேட்டாள் அவள்.

பெ: பணமா?

வா: யெ, அவள் அந்த மாதிரி பெண்பிள்ளை என்று மட்டும் எனக்கு தெரிந்திருந்தால், கடவுள் அறிய, நான் தெருவில் திரும்பிப்போய் எங்கேயோ ஒரு பூங்காவில் காலை நீட்டி தூங்கப் போயிருப்பேன்.

பெ: அவள் கேட்டது அதுதானு—பணம்?

வா: யெ. என் மாதிரி ஒருவன் தேசம் முழுதும் கப்பல் சரக்கை ஏற்றுகிறதும் தன் துரதிஷ்டத்தை ஒழிக்க முயற்சிக்கிறதும் ஒரு டவுன் மாறி இன்னொரு டவுனுக்கு போகிறதும் எங்கேயோ

ஏதாவது நல்லதை பெறப் பார்க்கிறதுமாக இருக்கிறவனை—அவள் பணம் கேட்கிருள். நான் நினைத்தேன், அவள் தனிமையாக இருப்பாள். இருந்ததாகத்தான் அவளே சொன்னுள்.

பெ: அவள் இருந்திருக்கலாம்.

வா: ஏதாகவோ இருந்தாள் அவள்.

பெ: இப்படி நடந்திருக்காது போனுல், நான் உன்னை பார்த்திருக்கவே முடியாது, எனக்கு தோன்றுகிறது.

வா: ஓ, எனக்குத் தெரியாது அது—இந்த வழியாகவே நான் நடந்து போய் இந்த டவுனில் எங்கேயாவது உன்னை கண்டுவிடுவேன். உன்னை இனம் அறிய முடியும் என்னுல்.

பெ: என்னை இனம் அறியவா?

வா: நிச்சயமாக உன்னை கண்ணுல் பார்த்த விநாடியில் இனம் அறிந்துவிடுவேன்.

பெ: சரி. நான் யாரா இருப்பேன்?

வா: என்னுடையவளாக.

பெ: நேர்மையாக?

வா: கடவுள் அறிய.

பெ: நீ சிறையில் இருக்கிறதினுலே இப்படி சொல்கிருய்?

வா: இல்லை. உள்ளதை சொல்கிறேன். மூட்டை கட்டிக்கொண்டு நீ எனக்காக காத்திரு. இந்த நரகத்தை விட்டு ஃபிரிஸ்கோவுக்கு விட்டடித்துவிடுவோம்.

பெ: நீ தனியாக இருக்கிருய்.

வா: வாழ்நாள் முழுக்க நான் தனியாகத்தான்—அதுக்கு நிவர்த்தியே கிடையாது—ஆனுல் நீயும் நானும்—நிறைய வேடிக்கையும் தமாஷாக கழிக்கலாம். எனக்கு அதிர்ஷ்டத்தை நீ கொண்டு வருவாய், தெரியும் எனக்கு.

பெ: இத்தனை காலமும் அதிர்ஷ்டம் எப்படி வரும் என்று நீ நினைத்துக் கொண்டிருந்தாய்?

வா: நான் சூதாடி. நான் வேலை செய்கிறதில்லை. எனக்கு அதிர்ஷ்டம் வந்தாக வேண்டும். இல்லை, நான் உதவாக்கரை. வருஷக் கணக்காக பெயரளவுக்கும் அதிர்ஷ்டம் எனக்கு வந்ததில்லை. இன்றுவரை இரண்டு வருஷமாக—ஒரு இடம்விட்டு இன்னெரு இடம். எங்கேயும் எப்பவும் துரதிஷ்டம் தான். அதனுலேதான் வீலிங்லேயும் நான் சங்கடத்தில் மாட்டிக்கொண்டேன். அது யதேச்சையாக ஏற்பட்டது இல்லை. என் கூடவே எங்கேயும் தொடரும் என் துரதிர்ஷ்டம்தான். அதனுலேதான் என் மண்டை பாதி பிளந்து போய் இங்கே இருக்கிறேன் நான். நான் யூகிக்கிறேன், இதை செய்தது அவளது கிழவனுக இருக்கவேண்டும்.

பெ: அவள் தகப்பனைச் சொல்கிருயா?

வா: இல்லை, அவள் புருஷனை. அந்த மாதிரி ஒரு கிழடு எனக்கு இருந்தால் அவளை நான் வெளியே தள்ளி இருப்பேன்.

பெ: நான் உன் கூட வந்தால் உனக்கு அதிர்ஷ்டம் வரும் என்று நினைக்கிருயா நீ?

வா: அது நிச்சயம். பிறர் வாய்ப்பை கெடுப்பதில் சமர்த்தன் நான். எனக்கு வேண்டியதெல்லாம் உன் மாதிரி நல்லவர் யாராவது என்கூட இருப்பது தான். தெருவில் எதெதாவது அப்போது இருக்கும் என்கிறதுக்காக எப்பவும் தெருக்களை சுற்றிக் கொண்டே இருப்பதில் உபயோகம் இல்லை. எப்போதைக்கும் 'யாராவது உன்னேடு கூடவே இருக்கச் செய்யவேண்டும்—மாரிக்காலத்தில் குளிரும்போது, வசந்தத்தில் அழகாக இருக்கிறபோது, கோடையில் நன்ருகவும் உஷ்ணமாகவும் இருக்கும் போது—அப்போது நீ நீந்தப்போகலாம்—எல்லா காலத்துக்கும், மனிதன் சாகுமுன் அநுபவித்து ஆக வேண்டிய மழை, பனி இன்னும் எல்லா பலவித கால நிலைகளிலும் சரியாக இருக்கிற யாராவது உனக்கு இருக்கவேண்டும். பின்னுலிருந்து தள்ளி உன்னை அறிந்துள்ள யாராவது. நீ செய்கிறது தப்பு என்று தெரிந்தாலும் உன்னை விரும்புகிற யாராவது. நான் செய்கிறது தப்பு, எனக்குத் தெரியும். ஆனுல் ஒரு நாய் மாதிரி கடுமையான, இல்லை லேசான வழியில் போக நான் விரும்பவில்லை. வேலை செய்வது கடினமானது, லேசானது—இரண்டும். நான் செய்யவேண்டியதெல்லாம் எப்பவும் பர்சை தட்டவேண்டியதுதான்—பிறகு நான் அதிருப்திப் பட மாட்டேன், யாரையும் வெறுக்கவும் மாட்டேன். நீ என்கூட கிளம்பினுல் நீ இதுவரை பார்த்திராத பலே பயலாக நான் இருப்பேன். இனிமேல் நான் தப்புச் செய்யமாட்டேன். உனக்கு அந்த பணம் போதுமானது கிடைத்த பிறகு, அதுக்கு மேலே நீ செய்கிறது தப்பாக இருக்க முடியாதே—நீ செய்கிறது சரியாக இருக்கும். ஏன்னுல் பணம் சொல்கிறது அப்படி. நிறைய பணம் என்னிடம் இருக்கும். உலகத்திலேயே சிறந்த அதிசய அழகியாக இருப்பாய் நீ. உன்னேடு கைகோர்த்து ஃபிரிஸ்கோவில் சுற்றுகிறபோது நான் பெருமைப் படுவேன். ஜனங்கள் நம்மை திரும்பிப் பார்ப்பார்கள்.

பெ: அவர்கள் அப்படி செய்வார்கள் என்று நீ நினைக்கிருயா?

வா: நிச்சயமாக, பார்ப்பார்கள். நான் கண்யமான உடை அணிந்து நீ என் கைக்கோர்ப்பில் இருக்கும்போது—சரி கேட்டி, அவர்கள் திரும்பிப் பார்ப்பார்கள், இருக்கிறதையும் பார்ப்பார்கள்.

பெ: கேட்டி?

வா: இது முதல் அதுதான் உன் பெயரே. கேட்டி என்று நான் அழைத்த முதல் பெண் நீ தான். உனக்காகவே அதை பிடித்துவைத்திருந்தேன். சரிதானே?

பெ: சரிதான்.

வா: எவ்வளவு நேரமாக நான் இங்கே இருக்கிறேன்?

பெ: நேற்று இரவு முதல். இன்று காலமே நேரம் கழித்துதான் நீ எழுந்திருந்தாய்.

வா: இப்போது மணி? சுமார் ஒன்பது?

பெ: பத்துக்கு அடுத்து.

வா: இந்த தருத்திர அறைச் சாவி உன்னிடம் இருக்கா?

பெ: சாவிகளை நான் கையாள விடமாட்டார்கள்.

வா: சரி, சம்பாதிக்க முடியுமா?

பெ: முடியாது.

வா: முயன்று பாரேன்.

பெ: எந்த சாவி கிட்டவும் போகவிடமாட்டார்கள் என்னை. யாரையாவது இதுக்குள் வைக்கிற போது நான் சமைக்கிறேன் இந்த சிறைக்கு. சுத்தம் செய்கிறது, அது மாதிரி வேலைகள் செய்கிறேன்.

வா : சரி, நான் இதைவிட்டு வெளியேறிவிட வேண்டும். இந்த மட்டமான இடத்துக்கான நிர்வாகியை தெரியுமா உனக்கு?

பெ : எனக்குத் தெரியும் அவனை. ஆனால் அவன் உன்னை வெளியே விடமாட்டானே. வேறே டவுனில் உள்ள இன்னொரு சிறைக்கு உன்னை கொண்டுபோகிறதாக பேசிக்கொண்டிருந்தார்கள்.

வா : யெ. ஏன்?

பெ : அவர்களுக்கு பயம்.

வா : எதுக்கு பயம்?

பெ : நடு இரவிலே வீலிங்லிருந்து ஆட்கள் வந்து உடைத்து நுழைவார்கள் என்கிற பயம் தான்.

வா : யெ, எதுக்காக அப்படி செய்வார்களாம்?

பெ : எதுக்காக என்று உனக்குத் தெரியவில்லை?

வா : யெ, தெரிகிறது எனக்கு.

பெ : நீ அருண்டு போயிருக்கிருயா?

வா : நிச்சயமாக அருண்டுதான். அறியாமையைப் போல ஒருவனை எதுவும் பீதிப்படுத்துகிறதில்லை. மூடர்களாக இல்லாதவர்களோடு நீ விவகாரம் பேசலாம், ஆனுல் முட்டாள்களுடன் முடியாது. அவர்கள் செய்யப் புறப்பட்டு விடுவார்கள், எதை நினைத்தார்களோ அதை செய்தே திருவார்கள். என்னை இதை விட்டு வெளியேற்றி விடு.

பெ : எப்படி ?

வா : சரி, அந்த சாவிவைத்திருப்பவனை கூட்டிவா. அவனிடம் பேசிப்பார்க்கிறேன்.

பெ : அவன் வீட்டுக்குப் போய்விட்டானே. எல்லோருமே போய்விட்டார்கள்.

வா : இந்த சின்ன சிறையிலே நான் மட்டும் இருக்கிறதாகவா சொல்கிருய்?

பெ : ஆமாம்—யெ—என்னைத்தவிர.

வா : சரி—என்ன அர்த்தம் இதுக்கு—ஒருவராவது முழுநேரத்துக்கும் இங்கே இருக்கிறதில்லையா?

பெ : இல்லை, இரவு தினம் வீட்டுக்குப் போய் விடுவார்கள். நானும் சுத்தப்படுத்திவிட்டு போய் விடுகிறவள். இன்றைக்கு நாழி ஆக்கினேன்.

வா : எதுக்காக செய்தாய்?

பெ : உன்னிடம் பேச விரும்பி.

வா : மனப்பூர்வமாக? எதைப் பற்றி பேச?

பெ : ஓ, எனக்கே தெரியாது. நேற்று இரவு நான் உன்னை கவனித்துக்கொண்டேன். உன் தூக்கத்தில் பேசிக்கொண்டிருந்தாய் நீ. என்னையும் உனக்கு பிடித்தது. ஆனுலும் எழுந்ததும் உனக்கு என்னை பிடிக்காது என்றுதான் நினைத்தேன்.

வா : யெ, ஏன் பிடிக்காது?

பெ : எனக்குத் தெரியாது.

வா : யெ, சரி. நீ பிரமாதமாக இருக்கிருய். தெரியவில்லை?

பெ : இந்த மாதிரி என்னிடம் யாரும் பேசினதில்லை. டவுனில் இருக்கிற பயல்கள் எல்லாம்—(தயக்கம்)

வா : அவர்களுக்கென்ன? (தயக்கம்) சரி, என்ன அவர்களைப் பற்றி? வா சொல்லு.

பெ : என்னைப் பார்த்து சிரிக்கிருர்கள்.

வா : உன்னைப் பார்த்து சிரிக்கிருர்களா? முட்டாள்கள். எதைப்பற்றியும் அவர்களுக்கு என்ன தெரியும்? போய் நீ உன் சாமான்களுடன் இங்கே திரும்பி வா. ஃபிரிஸ்கோவுக்கு உன்னை என்னேடு கூட்டிப் போகிறேன். என்ன வயசு உனக்கு?

பெ : ஓ, பருவம் வந்தவள்.

வா : என்ன வயசு உனக்கு? என்னிடம் பொய் சொல்லாதே. பதினுறு?

பெ : பதினேழு எனக்கு.

வா : சரி, உன் அப்பா, அம்மாவை கூட்டிவா. போகுமுன் மணந்து கொண்டுவிடுவோம்.

பெ : என்னைப் போக விடமாட்டார்கள் அவர்கள்.

வா : ஏனும்?

பெ : எனக்குத் தெரியாது. ஆனுல் அவர்கள் மாட்டார்கள். மாட்டார்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

வா : மூடனுக இருக்காதே என்று உன் அப்பாவிடம் போய் சொல்லு, தெரிகிறதா? என்ன வேலை அவருக்கு, விவசாயியா?

பெ : இல்லை—எதுவும் இல்லை, சர்க்காரிலே இருந்து கொஞ்சம் நிவாரணம் கிடைக்கிறது அவருக்கு. காரணம் அவருக்கு அடிபட்டு விட்டதாக ஏதோ சொல்கிருர்கள். அவர் சொல்கிருர் பக்க வாட்டில் வலிக்கிறதாம். அது என்ன, எனக்குத் தெரியாது.

வா : ஆ, அவர் பொய்யன். சரி, உன்னை என்னேடு கூட்டிப்போகிறேன். தெரிகிறதா?

பெ : நான் சம்பாதிக்கிறதையும் அவர் எடுத்துக்கொண்டு விடுகிருர்.

வா : அதைச் செய்ய உரிமை இல்லையே அவருக்கு.

பெ : தெரியும் எனக்கு. அவர் செய்கிருரே.

வா : (அநேகமாக தனக்குள்) இந்த உலகமே நாறுகிறது. நீ இந்த டவுனிலேயே பிறந்திருக்கக் கூடாது, எதானுலும், அந்த மாதிரி ஒரு மனிதனை அப்பாவாகவும் பெற்றிருக்கக்கூடாது.

பெ : சில சமயம் அவருக்காக நான் வருந்தப் படுவேன்.

வா: அவருக்காக வருத்தம் எல்லாம் படாதே. (விரலால் சுட்டி) ஒருநாள் உன் அப்பாவிடம் நான் பேசப் போகிறேன். அந்த பேர்வழிக்கு சில விஷயம் நான் சொல்ல இருக்கு.

பெ: உனக்கு இருப்பது எனக்குத் தெரியும்.

வா: (திடீரென) ஹலலோ—யார் அங்கே! அந்த சாவி வைத்திருப்பவன் வந்து என்னை வெளியே திறந்துவிடுவானு பாரேன்.

பெ: ஓ, என்னுல் முடியாதே.

வா: ஏன் முடியாது ?

பெ: நான் வெறும் ஆள் இங்கே. வேலை செய்கிற ஒவ்வொரு நாளைக்கும் ஐம்பது சென்ட் எனக்கு தருவார்கள் அவர்கள்.

வா: எவ்வளவு?

பெ: ஐம்பது சென்ட்கள்.

வா: (உலகத்துக்கு) பார்த்தாயா? உன்னை பார்க்கவே அவர்கள் பணம் கொடுக்கவேண்டும்—நீ சுவாசிக்கிற காற்றை அவர்கள் சுவாசிக்க. எனக்குத் தெரியவில்லை. இதில் ஒரு அர்த்தமும் இல்லை என்று

(113ம் பக்கம் பார்க்க)

மௌனி

# சாவில் பிறந்த சிருஷ்டி

(மௌனியின இன்னொரு கதை கிடைத்து விட்டது. 1954ல் 'சிவாஜி' மலரில் வெளியானது. மௌனியை சிதம்பரத்தில் சந்தித்த தரும சிவராமூ கதையை நகல் எடுத்து ஆர்வத்துடன் கொண்டு தந்ததுக்கு நன்றி.

கிடைக்கவேண்டிய பாக்கி ஒரே கதை 'சிகிச்சை' என்பது. 1937 ஹநுமான் ஆண்டு மலரில் வெளியானது. வாசகருக்கு அது கிடைத்தால், அச்சானதை அனுப்ப இயலாவிட்டாலும் நகல் செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம் ஆ—ர்)

ஒரு மாதம் முன்பே கௌரியை அவள் தங்கையின் கலியாணத்தை முன்னிட்டு பிறந்தகம் அனுப்பி விட்டு தனியாக வீட்டிலிருந்த சுப்பய்யருக்கு வாழ்க்கையே கசந்து விட்டது. மனைவியை முன்கூட்டி அனுப்பிய தன் தவறுக்கு தன்னையே நொந்து கொண்டார். ஒவ்வொரு நாளையும், துன்புறுத்தும் ஒவ்வொரு நாளாக கணக்கிட்டுக்கொண்டிருந்த சுப்பய்யருக்கு, தன் மைத்துனியின் கலியாணம் வெகுவாக தாமதப்பட்டு வருவதாக தோன்றியது. கலியாணத்தன்று போவதாக எண்ணியிருந்த அவர் புதுமாப்பிள்ளை வந்து இறங்குமுன் முதல் மாப்பிள்ளையாக தன் மனைவி ஊர் போய் சேர்ந்தார்.

சுப்பய்யருக்கு ஐம்பது வயது இருக்கலாம். அவர் மதிப்பிற்கு குறைவாகவே தோற்றமளிக்கும் சரீரமுடையவர். குழந்தைகளின்றி, பத்து வருஷங்களுக்கு முன் அவருடைய மூத்த மனைவி நோய் வாய்ப்பட்டு கொஞ்சநாள் இருந்து இறந்து விட்டாள். அதற்குப் பிறகு நான்கைந்து வருஷம் கல்யாணம் செய்துகொள்ளாமலே அவர் காலம் கழித்தார். பிறகு கௌரியை மணம் புரிந்து கொண்டு நாலைந்து வருஷம் ஆகிறது. சிறு வயதில் தாய் தந்தையை இழந்து பிருமசாரியாக வாழ்ந்த தனிமையையும் தன் மனதில் நன்கு உணர்ந்தவர், ஆயினும் கடந்த ஒரு மாதமாக கௌரியை ஊருக்கு அனுப்பியதிலிருந்து அவர் கண்ட தனிமை ஏதோ ஒரு விதமாக மனதில் சஞ்சலம் கொடுப்பதை உணர்ந்தார். கல்யாணத்திற்குப் பிறகு அவர் கௌரியை பிறந்தகம் அனுப்பியதே இல்லை. எப்போதாவது அவ்வப்போது ஏதாவது ஒரு காரணம் காட்டி தட்டிக்கழித்து விடுவார். சரியெனக் கேட்கும் தன் மனைவியின் மனப்போக்கை அவர் அப்போது ஆராய்ந்து அறிந்து கொள்ளாததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவளும் போவதற்கு இஷ்டப்படவில்லை என தன் மனதிற்குகந்தவாறு சமாதானம் அடைவதுண்டு. தன் சுய நலத்தை அறியாது அவருடைய சவுகரியத்தின் பொருட்டே தான் செய்வது சரி என்ற நினைவில் மனது சமாதானம் அடைகிறது. இவ்விதம் அவர் தம் மனைவியிடம் கொண்ட பிரியம், தான் தனிமையில் காணும் சஞ்சலத்தின் காரணம் போலும். சுப்பய்யருக்கு கிராமத்தில் நல்ல சொத்தும் மதிப்பும் இருந்தன.

ஒரு சுமாரான குடும்பத்தில் ஐந்து குழந்தைகளுக்கு மூத்தவளாகப் பிறந்தவள் கௌரி. சிறு வயதிலிருந்து அவளுடைய குறுகுறுப்பும் அமைதியான அழகும் அவள் பெற்றோர்களுக்கு வருத்தத்தைக் கொடுத்தன. அவளுக்கு வயது ஆக ஆக அவள் கல்யாணத்திற்காக அவர்கள் மிகக் கஷ்டப்பட்டனர். கல்யாணத்திற்குப் பிறகு கௌரியைப் பார்க்காவிட்டாலும் சுப்பய்யரோடு சவுகரியமாக வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருக்கிறாள் என்பதில் அவர்களுக்கு ஒருவகையில் திருப்திதான். கௌரி ஒரு கெட்டிக்காரப் பெண். தோற்றத்திலும் அவள் வெகு வசீகரம் உடையவள். அவள் மனது சுலபமாகக் கண்டறிவதற்கு அகப்படுவதில்லை. பிறருக்கு ஒன்றையும் நிச்சயம் கொடுக்காத வகையில் தான் அவள் போக்கும் பேச்சும் இருக்கும். தன்னுடைய கலியாணத்திற்குப் பிறகு, தன் தாயார் தகப்பனார் மன ஆறுதல் சிறிது அடைந்தார்கள் என்பதைத் தெரிந்து கொண்டதில், தன் தியாகத்தினாலென அவர்கள் எண்ணங்கொள்ளா வகையிலும், தானும் அவ்வகை நினைப்பின்றியும் தான், அவர்களிடமும் தன் கணவனிடமும் நடந்துகொண்டாள். தன் தியாகம் என்ற நினைப்பில் கொள்ளும் பெருமிதமும் அவள் மனது கொள்ளவில்லை. அவ்விதமாயின் அதன் விளைவாக தான் தன் கணவனிடம் கொள்ளும் பிரியம் பாதிக்கப்படும் என்பதைச் சூட்சுமமாக அவள் மனது உணர்ந்தது போலும், கல்யாணத்திற்குப்பின் வெகு சீக்கிரமாகக் கௌரியின் மனது அவள் வயதுக்கு மீறியே பக்குவமடைந்துவிட்டது.

கலியாண இரண்டாம் நாள். வாயில் திண்ணையில் ஏனையவர்கள் மத்தியில் பேசாது உட்கார்ந்து கொண்டிருந்தவர் கூடத்திலிருந்து கலகலப்பான பேச்சு, சிரிப்பு சப்தங்கள் வந்து கொண்டிருந்ததைக் கவனித்தார். அந்தப் பேச்சு, சிரிப்பு சப்தங்களிலும், தன் மனைவி கௌரியின் சிரிப்பொலி மேலோங்கி மிதந்து இவர் காதில் விழுந்துகொண்டிருந்தது. வெகுகாலமாகத் தான் வாழ்க்கையில் கண்டுணராத ஒருவித இன்ப உணர்ச்சியுடன் உள்ளே தன் மனைவியைக் காணும் ஆவலில் நுழைந்தார். ரேழியிலிருந்து தன் மனைவி வெகு குதூகலத்தில் அநேகர் மத்தியில் ஒரு ராணியெனப் பார்வை கொண்டு பேசியும் சிரித்தும் நின்றிருந்ததைப் பார்த்தார். தனக்கு வாழ்க்கைப்பட்டதிலிருந்து கௌரியைத் தான் அறிந்து கொண்டவிதம் அவள் இவ்விதமான ஒரு கலகலப்பான பெண்ணென எண்ணம் கொள்ள முடியவில்லை. ஓர் உயர் வகை இன்பம் தனக்கு உண்டாக வேண்டியதை—கூடியதை அவள் மறைத்து விடுகிறாள். வேண்டுமென்றுதானே தன்னிடம் மாறுவிதமாகப் பழகுகிறாள். உள்ளே தன் பிறந்தகத்துக் கூடத்திலே அவள் தோற்றம், பேச்சு, சிரிப்பு, குதூகலம்...

எல்லாவற்றையும் தன்னிடம் மறைத்துக்கொண்டு தான் பழகுகிறாள்...என்பதான எண்ணங்களைக் கொண்டு வாயிற்புறம் திண்ணையில் பழையபடி வந்து உட்கார்ந்துகொண்டார். திடீரென மனதில் ஒரு ஆத்திரம் காண, மறுபடியும் உள்ளே சென்றவர், தன் மனைவியைத் தனியே கூப்பிட்டு ஏதோ அவள் மனது நோகப் பேசி, உடனே ஊருக்குக் கிளம்ப ஏற்பாடு செய்யும்படிச் சொன்னார். தனக்கு இருப்புக் கொள்ளவில்லை என்றாலும், தன் மனைவியையும் விட்டுப்போக மனமில்லை. அநேக உயர் குணமும் ஞானமும் படைத்த சுப்பய்யருக்கு, இந்த மூர்த்தண்யமும் கூட இருந்தது. சமீபகாலமாக அதிகமாகவும் தலைகாட்ட ஆரம்பித்தது. வயது ஆக ஆக, அவருடைய முன் கோபம் கட்டுக்கடங்காது அதிகமாகி தன்னுடைய மனைவியிடமும் இடம் காலம் மாறி கொள்ளும் நிலைக்கும் வந்தது.

கௌரிக்கு உள்ளூர கொழுந்துவிட்டெரியும் கோபம் ஒரு பக்கம். சமய சந்தர்ப்பத்தை உத்தேசித்து விகாரமாக இல்லாத வகையில் தன் வீட்டவர்களுக்கும் ஏனைய மற்றவர்களுக்கும் ஏதோ காரணங்கள் சொல்லி ஊருக்குக் கிளம்ப ஆயத்தமானாள். கலியாணவீட்டை விட்டு வண்டியேறி ரயிலடியை அடைவதற்குள், சுப்பய்யர் மனது பல விதத்தில் சலிக்க ஆரம்பித்தது. தான் செய்தது சரிதானா என்பது புரியவில்லை, ஒரு உன்னத வகை என்பதின்றி, ஒதுங்கிப் பதுங்கி ஊளையிடுவது போன்று பயத்திலும் அருவருப்பிலும் தெரிந்து, மனது ஒருவகை வருத்தமுற்றது. ஒரு நிச்சயமான மன உணர்ச்சியைக் கொள்ள அவளுக்கு தெம்பில்லை. ஒருவரையொருவர் நேராகப் பார்த்துக் கொள்ளாமலும் பேச்சில்லாமலும் ரயிலில் ஏறி அமர்ந்து கொண்டனர். பலவகை உணர்ச்சிப் பெருக்கில் ஊறித்திளைத்த மனதானது, வெறுப்பில் தான் ஊறிக்களைத்து நின்றது போலும். பரஸ்பர வெறுப்பில் ஒற்றுமைகொண்ட தம்பதிகளாகஅன்று பிரயாணத்தைத் தொடங்கினர். ரயிலும் புறப்பட்டு விட்டது.

வண்டி நகருமளவும், எதிரே, கீழே உலாவி நின்ற ஒரு வாலிபனும் வண்டி நகர்ந்ததும் வெகு நாசுக்காக ஓடிவந்து தாவி, கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு ஏறினான். சின்ன கைகாட்டியைத் தாண்டுமளவும் கதவடியிலேயே நின்று பார்த்து விட்டு சாவதானமாக உள்ளே வந்தான். எட்டி இருந்த காலி இடங்களை விட்டுவிட்டு இவர்கள் எதிரில் அமர்ந்தான். ஜன்னலுக்கு வெளியே தன்னுடைய பார்வையைக் கொள்ள, ஏங்கித் துடித்துப் பரந்து கிடந்த இயற்கைக் காட்சிகளைத் தலையை நீட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் கண்ட இன்பத்தை சீட்டி மூலமாகவும், முணுமுணுப்பு கீதமாகவும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். இந்த நவநாகரீக வாலிபனின் சேஷ்டைகள் இவ்விதங்களினாலன்றி எதிரிலுள்ளவர்களின் மதிப்பையும் கவனிப்பையும் கொள்ள முடியாது என்பது போன்றிருந்தன. எவ்வளவு நேரம் தான் அவனால் எதிரிலுள்ளவர்களை நினைத்துக் கொண்டு வெளியே பார்க்கமுடியும்? இவர்கள் பக்கம் திரும்பும் பொழுது, இவனையே வெகுநேரமாக எதிர்பார்த்தவர் போன்று, 'எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே சார்...' என்று சுப்பய்யர் கேட்டது இவனுக்குத் தூக்கிவாரிப் போடும்படி இருந்தது, அவருடைய சப்தமேயல்லாது கேள்வியல்ல. அவனுக்குப் புரியுமுன் மனது இன்பத்தில் திடுக்கிட்டு விட்டது போலும். அவர்களுடன் பேசுவதற்கான சூழ்ச்சிகளை யோசித்துக் கையாளுவதற்கு முன்பே, எதிர்பார்த்தது இவ்வளவு சுலபமாக நேர்ந்ததில் கொஞ்சம் குழப்பமடைந்தான். பதில் ஒன்றும் சொல்லாமல் ஒட்டிக்கொண்டு கொஞ்சுதலான பாவத்தில், முகத்தில் லேசான அசட்டுப் புன்சிரிப்புடன் உடம்பை ஒருதரம் நெளித்துக்கொண்டான். ஏதோ யோசிக்கும் பாவனையில் தலை குனிந்து கொண்டான்.

கௌரிக்கு வந்த சிரிப்பை அடக்கமுடியவில்லை. கொஞ்சம் வாய்விட்டே சிரித்துவிட்டாள். சுப்பய்யர் இவள் பக்கம் திரும்பி 'என்ன' என்றதற்கு, 'ஏதோ யோசனைகள்' என்றாள்.

எதிரிலுள்ள வாலிபன் தன் கைக்குட்டையால் முகத்திற்கு 'பாலிஷ்' கொடுத்துக் கொண்டிருந்தான். பாவம், தற்கால வாலிபர்களின் பரிதவிப்பு, வெகு விநோதமாக அவன் உருக்கொண்டு நடையுடை பாவனைகளில் ஒளிந்து தவித்தது.

கௌரியின் வசீகரம் வெகு நிரடானது, வெகு தெளிவானது. பெண்ணைப் படைத்தவன் பெண்களைப் பார்க்கும்போது தோன்ற எதையுமோ படைத்தானோ என்று எண்ண முடியுமேயல்லாது, இதைத்தான் என்று நிச்சயமாகக் கொள்ளும்படி இராது. இவளைப் பார்ப்பவர்களுக்கு ஒரே மாதிரி தோற்றம் கொடுக்கும் வகையல்ல அழகிய அவள் முகம், அறிய முடியாத அவள் மனப் போக்குடன் அவள் முகத் தோற்றமடையும், சலனம். அழகிற்குத்தான் எவ்வெவ்வகைச் சாயல்கள், அவள் மனது வெகு நேர்மையானது. எந்த ஆடவனையும் நோக்கின மறுகணம் அவள் கண்கள் லேசாக மாசடைந்து பாதி மூடிக் கொள்ளும், கனவென வாழ்க்கை கொண்ட கௌரிக்கு அன்று மனது சரியாக இல்லை.

பக்கத்து ஜங்ஷனை அடையும்போது பகல் பனிரெண்டுமணி இருக்கும். வண்டி நின்றவுடன் கையில் கூஜாவுடன் சுப்பய்யர் கீழே இறங்கினார். வண்டி புறப்பட மணி அடித்தாகிவிட்டது. சுப்பய்யர் கூஜாவில் ஜலம் பிடித்துக்கொண்டு வந்தபாடில்லை. அவர் வராததில் சஞ்சலமடைந்தவளே போன்று, கௌரி வெளியில் அங்கு மிங்கும் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'வண்டி புறப்பட நேரமாகிவிட்டது அவரைக் காணோமே...' என்று பேச்சை எடுத்த வாலிபன் திரும்பிய அவள் கண்களின் பார்வையைக் கண்ட போது ஒன்றும் புரியாமல் நிறுத்திவிட்டு, அவர் வருவதைக் கவனிப்பதுபோல வெளியே பார்த்தான்.

வேகமாக ஓடிவந்த கிழவர் வண்டி ஏறுவதும் வண்டி நகருவதும் ஒன்றாக இருந்தன. இரைந்து சிரித்துக் கொண்டு நடுநடுவே இருமிக் கொண்டும் வந்தவர் கௌரியைப் பார்த்தது ஒருவிதமாகத் தெரிந்தது... 'குழாயடியில் கூட்டம்...நின்றுகொண்டே இருந்ததில் ஒன்றுமே புரியவில்லை. முந்தாநாள் உன்னையழைக்க உங்களூர் வரும் ஞாபகம்தான்...

வண்டி ஊதினதும் தான் ரயிலில் எதையோ மறந்து வைத்துவிட்டு வெளியே அங்கே நிற்பதான ஞாபகம் வந்தது. உன் ஞாபகம் தான்...வேகமாக ஓடிவந்து ஏறிக்கொண்டேன். வயதாச்சோன்னோ? வண்டி போனால்தான் என்ன என்று தோன்றியது, ஓடி வரும்போது...அடுத்த வண்டி இல்லையா...துணைக்கு நீங்கள் இல்லையா ஸார்...ரயில்லே போகிறபோது தான் ஸார் குஷியாக என்னவெல்லாமோ தோன்றுகிறது. ஸ்நேகமும் அகப்படுகிறது. நாளைக்குப் பின்னாலே நடக்கப் போகிறதெல்லாம் நேத்திக்கு முன்னாலே நடந்தது போல காலம் எல்லாம் தலை கீழே மாறிப்போகிறது ஸார்...' என்று என்னவெல்லாமோ இவளிடமும் அவனிடமும் மாறி மாறிப் பேசிக்கொண்டிருந்தார்.

கௌரிக்குத் துக்கம் தாங்கமுடியவில்லை. தன் கணவனின் இவ்வகைப் பேச்சுக்கு ஆதாரமான கோளாறை அவள் கொஞ்சம் கொஞ்சமாக உணர ஆரம்பித்தாள்போலும்! அறியாத ஒருவகை பயமும், தன் கணவனிடம் ஒருவித அனுதாபமும் அவள் மனது கொண்டது, தன்னைப் பற்றி தவறாக, அவரவர்கள் அபிப்பிராயம் போனவாக்கில் கொள்ளாத வகைக்கு, தான் எவ்விதம் இருக்கவேண்டுமென்று அவளுக்குத் தோன்றவில்லை. ஏதோ ஒரு தவறிய சூழ்நிலையில் தான் அகப்பட்டுக்கொண்டு தத்தளிப்பதான எண்ணம் கொண்டாள். ஊரில் தன் தங்கையின் கலியாண இரண்டாம் நாள். அதை நினைக்கும் போது மனது வருத்தம் கொள்கிறது. தன்னால் ஆவது ஒன்றுமில்லை......விதி தனக்குத் தெரியாது பின்னின்று உந்தித் தள்ளத்தான் இருக்கிறது... ஏதோ நடக்கப் போவதில் நடந்ததென பின் ஆறுதலை முன்கூட்டிக் கொள்ளும்படிதான் இப்பொழுது இருக்கிறது...அவளால் மேலே யோசிக்க முடியவில்லை.

வாலிபன் கிழவரைப் பார்த்துச் சொல்லிக் கொண்டிருந்தான். 'ஆமாம்—நீங்கள் வராதது பெண்ணிற்குக்கூட ரொம்ப கவலையாக இருந்தது... நான் கூட...' அவன் முடிக்கு முன்—'பெண்ணில்லை ஸார்—பெண்ணில்லை. அவள் நம்ப ஸம்ஸாரம். கௌரின்னு பேரு—' என்று சொல்லிச் சிரித்தார். வாய் நிறைய நின்ற வரிசையான பொய்ப்பற்களைக் காட்டி அவர் சிரித்ததானது, பயங்கரம் தோன்ற இருந்தது. அவர் மூளை சமீபகாலமாக, ஏறாத ஒரு திருவிருப்புக் கொண்டிருப்பதை கௌரி உணர்ந்து கொண்டாள். காலையில் யார் முகத்தில் விழித்தோமோ என்று தன்னைத்தானே நொந்துகொண்டாள். நல்லபடியாக ஊரையாவது போய் அடைவோம் என்ற கவலையில், வேகம் கொண்டு பேசத் தன் கணவனுக்கு ஒரு வாலிபன் எதிரில் அகப்படுகிறான்!

'ஓகோ "ஒய்பா"? ... ஏதாவது குழந்தை குட்டிகள்?'

'இல்லை ஸார். இனிமேல் தான்...ஆசீர்வாதம்' என்றார் கிழவர்.

கௌரி எங்கேயாவது ஓடிவிடலாமா என்ற எண்ணத்தில் கணவனைப் பார்த்தாள். அவரைப் பார்க்கும்போது மனது வேதனைதான் கொள்ளுகிறது.

'கௌரி உன்கிட்ட ஒரு சமாசாரம்...குழாயடியில் உன்னை மறந்து நின்றிருந்தேன் என்று சொல்லவில்லையா? அப்போது கூட்டத்தில் ஒருவன் உங்க எதிராளாத்து சுப்பிணி மாதிரி இருந்தான். அவனை ஊரிலே விட்டு வந்தோமே, எங்கே இங்கே ரயிலைத் துரத்திக்கொண்டு தொத்தி ஏறிக்கொண்டா வருகிறான், என்று நினைத்துக் கொண்டு, கூப்பிடலாம் என்று வாயெடுத்தேன். அவன் நல்ல வேளையா திரும்பினான். அவன் இல்லை. அவனே போலத் தான்—ரொம்ப வேடிக்கை ஸார், கூப்பிட்டுவிட்டு இல்லை என்று தெரிந்தால் ஸார்...' கௌரியைப் பார்த்துக்கொண்டே ஸார் பட்டம் அவளுக்கு வழங்கியதை நினைத்து திடுக்கிட்டு இவன் பக்கம் திரும்பி, '...வேடிக்கை ஸார்...வேடிக்கை. எதற்காக சொல்லுகிறேன் என்றால் உங்க சாயலும் உண்டு ஸார்... வாலிபமாச்சோன்னோ...'.

'சுப்பிணி' என்ற வார்த்தை, முள்ளென பலவித அருத்தத்தில் கௌரியைக் குத்த உபயோகிக்கும் ஒரு அஸ்திரம். அவள் எதிராளாத்து 'சுப்பிணி' என்பவனுக்கு, சிறுவயதில் தன்னைத் தன் பெற்றோர்கள் கலியாணம் செய்து முடிக்க எண்ணியதும், அது நடக்காமல் போனதும் கௌரியின் குற்றத்தினாலல்ல. இந்த விஷயமும் சுப்பய்யருக்கு ஏதோ ஒரு சமயம் அவள் சொல்லித்தான் தெரியும், பலவிதத்தில் அவள் மனது நோக அருத்தம் கொடுக்குமாறு அவர் எப்போதாவது 'சுப்பிணி' என்ற பதத்தை அந்தந்த சமய சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு எடுப்பார். சுப்பய்யர் அப்போது ஒன்று தெரிந்து கொள்ளவில்லை. புண்பட்டுக் காய்ச்சிய மனதிற்கு நோவில்லை என்பதைத்தான். அவிழ்ந்து பறந்த புடவையின் முந்தானை தன் கணவன் முகத்தில் பட, அதைப் பிடித்து இழுத்து தன் முகத்தைத் துடைத்துக்கொண்டு இடுப்பில் செருகிக் கொண்டாள் கௌரி.

ஒரு சிறிய ஸ்டேஷனில் வண்டி நின்றதும் ஏராளமான ஜனக்கூட்டம் இறங்கியது. அந்த ஊரில் சந்தை கூடுகிறது போலும், மணி அடித்து வண்டியும் நகர்ந்தது.

'கிழக்கே போகிற வண்டிக்கு மூன்று தரம் மணி அடிக்க வேண்டும் ஸார். வண்டி மேற்கே போக இரண்டுதரம். உங்களுக்குத் தெரியுமா ஸார்? மாத்தி அடிச்சா வண்டி போகிற பக்கம்தான் போகும்...ஆனால் திக்கு திசை மட்டும் மாறி விடும். கிழக்கு மேற்கா, தலை கீழா...எவ்வளவு பெரிய தலை போகிற விஷயம் மணி அடிப்பவன் கையில் இருக்கிறது தெரிகிறதா ஸார்...எவ்வளவு கவனமும் சிரத்தையும் வேண்டும் மணி அடிப்பவனுக்குக்கூட ...அதோ அவன் நிற்பதைக் கவனியுங்கோ ஸார்... திக்கு திசை தெரியாது மாறாமலிருக்கப் பார்த்துக் கொண்டு...'

வண்டியில் கூட்டமில்லை. வெயில் மிக உக்கிரமாக இருந்தது. மேலே படும் காற்றும் அனல்போல் காய்கிறது. 'நாவரட்சை தாங்கவில்லை. குடங்குடமாகக் குடித்தாலும் போதாது போலத் தோன்றுகிறது. இடமிருந்தும் படுக்கை கொள்ளவில்லை...' என்று அவனிடம், என்ன என்னவோ அவர் பேசிக் கொண்டிருந்தது ஒன்றும் கௌரியின் மனதில் படவில்லை. ஒரே விதமாக விட்டுவிட்டு, புரியாத வகை

யில் விடாது, புரிந்து கொள்ளும் வரையில் உளறிக் கொட்டும் கோட்சொல்லி போல ஒலித்துக் கொண்டிருந்த ரயில் சப்தத்தில் அவன் ஈடுபட்டிருந்தான்.

அடுத்த ஸ்டேஷனில் ரயில் நின்றவுடன், மறு ஒரு முறை கூஜாவுடன் சுப்பய்யர் கீழே இறங்கினர். போனவர், சீக்கிரமே, தின்பதற்குக் கொஞ்சம் பழமும் கூஜாவில் காப்பியும் வாங்கிவந்து கௌரியின் பக்கத்தில் வைத்துவிட்டு நின்றவர் அவனைப் பார்த்தார். பிறகு இருவர்களையும் மாறி மாறிப் பார்த்தார். அந்த வாலிபன் சட்டென எழுந்து 'நானும் கொஞ்சம் போய் ஏதாவது சாப்பிட்டுவிட்டு வருகிறேன்' என்று இவரைப் பார்த்துப் பேச ஆரம்பித்தவன் தன் கைககடிகாரத்தைப் பார்த்து விட்டு 'வண்டி கிளம்ப இன்னும் கொஞ்ச நேரம் இருக்கிறது' எனச் சொல்லி முடித்தான்.

'நல்ல உயர்ந்த ரக கடியாரம்போல் தோன்றுகிறதே ஸார்...பதினைந்து ரூபாய் பெறுமா? கடிகாரங்களே இப்போது கன்னுபின்னுவென்று கண்ட பேர் வழிகள் கையில் கட்டிக் கொள்ளுவதால் ஆனைவிலை குதிரை விலையாக விற்கிறது ஸார்...என்ன ஸார் நான் சொல்லுகிறது? என்றவர் அவனைத் தடுத்து 'நீங்கள் வேண்டாம்...நானே போய்விட்டு வருகிறேன்...' என மறு ஒரு முறை வெளியே சென்றார். அவரைத் தடுக்க முடியாமல் அந்த வாலிபன் தன் இருப்பிடத்தில் உட்கார்ந்து கொண்டான்.

கௌரிக்கு தன் கணவனும் வாலிபனும் தன்னைக் கவனிக்கும் விதம், நிச்சயமெனத் தெளிவுறுது இருந்தவை கொஞ்சம் கொஞ்சமாக தெளிவு படலாயிற்று. பாவம் என்னவாயினும் அவள் சிறு பெண் தானே? இருபது வயதுகூட இருக்காது. கால வித்தியாசம் என்பதால் தன்னைப் பிடிக்க கிழவனும் வாலிபனும் ஒன்றெனத்தான் தென்படுகிறார்கள். காலையிலிருந்து தன்னைப் பிடித்த சனியன் பல ரூபத்தில் ஆட்டுகிறான். கிழவனாகிக் கணவனாகிறான். ஓடும் ரயிலிலும் தொத்தி ஏறி எதிரில் உட்கார வாலிபம் கொள்கிறான். தான் பிறந்த உடன் தன் உயிரைப் பிடித்த சனியன் தன் பெண் உருவம் என்பதை அவள் அறிந்தாள்போலும். உயிரைக் கொண்டு உடம்பைத் தொலைத்து வாழ முடிகிறதில்லை. பெண்களென்றால் ஆறுதலுக்கு அழுவதற்குமில்லை. சிரிப்பதற்குமில்லை ஆடவர்களிடையே. அவள் மார்பிலிருந்து விம்மி எழுந்த மூச்சானது சப்தமற்றுத்தான் வெளிக்கலந்தது. மனதில் ஒரு சக்தி வேகம் கொள்ள அவள் முகம் தெளிவடைந்து காணப்பட்டது. உலகைத் தழுவும் 'பெண்மை'யை விசுவ ரூபத்தில் கொண்டாள் போலும்.

வெளியே சென்ற கிழவர் மெதுவாகவே தின் பண்டங்களை வாங்கிவந்தார். வரும்போதே தன் வருகையை சிரிப்பிலும் இருமலிலும் முன்னதாகவே தெரிவித்துக் கொண்டு வந்தார். ஒரு சந்தேகத்தை ஒரு வகையாக நிச்சயமெனத் தீர்த்துக்கொள்ள அவர் மனது பயம் கொண்டது போலும். வாங்கி வந்ததை அவன் கையில் கொடுத்தபோது, அவன் மற்றொரு கையை சட்டை ஜேபில் கொண்டு போனான். 'பாதகமில்லை ஸார்...கையை வெளியில் எடுங்கள்...ஒன்றும் பிரமாதமில்லை...அசல் ரயில் சிநேகிதம்போல பழகுகிறீர்களே. நான் உங்களைக் கண்டவுடனே கேட்கவில்லையா? யாரோ எங்கேயோ பார்த்த முகமாக இருக்கிறது என்று...' என்று சொல்லிச் சிரித்தார்.

நல்ல கோடை, பிற்பகல். வரண்ட வாய்க்கால்ஃ வயல்களின் குறுக்கே ரயில் ஓடிக்கொண்டிருந்தது. எட்டிய பனந்தோப்புகள், தெரிந்துகொண்டும் ஒன்று மறைந்த பின் மற்றொன்று தெரியவும் மறையவும் வரிசையாக வந்துகொண்டிருந்தவை, ஒன்றே மறைந்து தோற்றம் கொடுத்து விளையாடுவது போன்று தோன்றியது. இங்கு மங்குமாக ரயில் பாதையருகில் தோன்றி மறையவிருக்கும் குட்டைகளின் குழம்பிய சேற்று நீரில் எருமைகள் இன்பத்தில் மூழ்கிப் புரண்டு கொண்டிருந்தன. அவள் எதிரில், தனக்குத் தோன்று முன்பே மறைய இருக்கிறதே தன் மன இன்பம் என நினைத்தான் வாலிபன். ஒருகால் பிறர் ஆனந்தத்தைத் தோன்று முன் விழுங்க இருக்கிறதா அந்தக் கிழபூதம் என அவரைப் பார்த்தான். அவர் சிரித்துக்கொண்டிருந்தார். அவர் தொலைந்தால் தன் இன்பம் சாசுவதமாகுமா? மேலே யோசிக்க முடியவில்லை. பாவம் அவனால் என்ன செய்ய முடியும்? அவனால் அவர்களுக்கு எதிரில் உட்கார்ந்து இருக்கவும் முடியவில்லை. அங்கிருந்து நழுவிப்போய் எட்டிய அந்த காலியிடத்திலும் உட்காரும் வழி புரியவில்லை. ஏதோ ஒரு சங்கடத்தில் தான் அகப்பட்டுத் தத்தளிப்பதான எண்ணம் அவன் மனதில் கொண்டான். மாலைப்பொழுது கண்டுகொண்டு இருந்தது. அடித்த பஞ்சு போன்று ஆகாயத்தில் மேகத்திட்டுகள் மிதந்துகொண்டிருந்தன. மேற்கு அடிவானத்தில் அசைவற்றுக்கிடந்த மேக முகப்புகளுக்கு பொன் வரம்பு காட்டி சூரியன் மறைய இன்னும் கொஞ்சநேரம் இருந்தது.

கௌரியின் கண்கள் கலங்கிச் சிவந்து இருந்தன. சலிக்கும் அவள் முக அழகும் ஒரே விதத்தில் தோற்றம் கொடுத்தது. விட்டில் பூச்சிகள்போன்று விளக்கை வட்டமிட்டே அழிவதுதானா ஆடவர் வாழ்க்கை! கிட்டே நெருங்க கவர்ச்சி கொடுக்காது இருக்க எப்படி முடியும் பெண்களால்?

இருள் சுடரைக்கொண்டு விளக்காக முடியுமா? தன்னைத்தானே நொந்து கொண்டாள். அவள் கண்கள் சோர்வுகொண்டு பாதி மூடிக்கொண்டன. எல்லைக் கோட்டருகில் தெரியும் ஒரு வெளி, அதனைப் பொருள்கொள்ள ,அவளுடைய பகற்கனவினாலும் முடியவில்லை போலும்.

தோப்பின் நடுவில் நின்ற ஒரு சிறு குடிசை மரத்திடை எட்டிப்பார்ப்பது போல தெரிந்தது. ரயிலோடு மெதுவாக கொஞ்ச தூரம் ஊர்ந்து வந்தது. அதுவும் பின்தங்கி பார்வையில் மறைந்து விட்டது. ஒரு பயங்கரத்தின் நடுவில் எவ்வளவு நேரம் நின்றுகொண்டிருக்க முடிகிறது? நின்ற விடத்திலிருந்து பிரியும் பாதைகளென எண்ணற்றவை நேராகக் கொஞ்சதூரம் சென்று, திருப்பத்தில் கோணலாக வளைந்து மறைந்து கொண்டன. அநேகர் தன்னை விட்டுவிட்டு, எட்டி தன் தலையை மட்டும் சுமந்து கொண்டு எங்கேயோ சென்று கொண்டிருந்தனர். ஒன்றுகூடி தனக்குத் தெரியாமலே தன்னைப்பற்றி சதியாலோசனை செய்கிறார்கள். நெருங்கித் தெரிந்தாலும் புரியாத வழிக்குத்தான் தன்னைக் கலக்காமல் எட்டி மறைகிறார்கள். ஏதோ

உருளும் சப்தங்கள் மட்டும் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

சாலை ஓரத்தில் ஒரு கிழவி உட்கார்ந்து கொண்டிருக்கிருள். அவளைத் தெரியாமல் மறைத்து மூடிக் கொண்டிருக்கும் புற்கள் கூரிய கோரைப் புற்களாக இருந்தன. வெகு அப்பால் உள்ள ஒரு அழகிய நகரை அடையும் ஆவலை அவள் வெகுநாளாகப் பாடிக்கொண்டு இருக்கிருள். உள்ளம் கவரும் ஒரு கீதம் இவளைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு கிட்டே நெருங்க பயம் கொள்கிறது. 'என்ன கௌரி, தூக்கமா...' என்ருர் சுப்பய்யர். இல்லை எனச் சொல்லி ஏதோ பேசிக்கொண்டிருந்த அவரையும் அவனையும் மாறிமாறி பார்த்துவிட்டு மறுபடியும் தலையைக் கீழே குனிந்துகொண்டாள்...

...அப்பாலும் இப்பாலும் ஒரு கீதம் மௌனமாக ஒலிக்கிறது... 'ஏ குட்டி என்ன பாட்டு' என்று பார்த்தவுடன் புற்கள் காற்றுடன் ஓடிவிட்டன. தனது பொக்கை வாயைத் திறந்து காட்டி 'எத்தனை பேரோ பார்த்தாகி, நீதானு பாக்கி?...' என்று தனக்குத்தானே சிரித்துக்கொண்டாள். ஒன்றும் புரியாமல் தலைமயிரைக் கோதிக் கொண்ட போது தன் தலையைக் காணவில்லை. சதியாலோசனைக்காரர்களிடம் விட்டு வந்தது ஞாபகம் வந்தது. எதை தனக்குத் தெரியாததை எழுதி தலைக்குள் புகுத்தி விடுகிருர்களோ என்ற பயத்தில்நின்றுகொண்டு சுற்றும் முற்றும் கவனித்தாள். அவர்கள் தங்களிஷ்டமான யோசனைகளுடன் தலையைத் தூக்கிக்கொண்டு வந்தனர். இவளைத் தேடி 'ஜே—ஜே' எனக் கோஷமிட்டுக் கொண்டு இவளைச் சுற்றிச் சுற்றி தேடி அலைந்துகொண்டிருந்தார்கள்...வாடி வதங்கிய பூக்கள் அப்பால் ஆடிக்கொண்டும் அழுது கொண்டுமிருந்தன. அவைகளின் மணம் ஒருவர் மூக்கிலும் படாது, மறைந்து, பதுங்கி. எட்டே ஓடி, சிரித்துக்கொண்டிருந்தது...பூக்களின் நடுவில் நின்றுகொண்டிருந்தாள் கௌரி...தன்னைச் சுற்றிலும் ஒரு ஒளி வெறிச் சென்று காய்ந்துகொண்டிருந்தது. மறையும் சூரிய கிரணங்கள் ரயில் ஜன்னல் வழியாக இவள் முகத்தில் விழுந்துகொண்டிருந்தது. திடுக்கிட்டுக் கண் விழித்தாள்.

தன் கணவன் எதையோ வெகு சுவாரஸ்யமாக இரைந்து சொல்லிக்கொண்டிருந்தான். வெகு அலுப்பில் சிரத்தையாகக் கேட்கும் பாவனையில், அடிக்கடி தலையை ஆட்டிக் கொண்டிருந்த அந்த வாலிபனைப் பார்த்து அனுதாபங்கொண்டு 'ஏன் இத்த துன்பமெல்லாம் உனக்கு எனக் கௌரிக்குக் கேட்கத் தோன்றியது. அவள் அவனைப் பார்த்த பார்வைகூட அலுத்துக் கொண்டான் போலும். அவள் பக்கம் பார்க்காமலே வேறுபக்கம் தலையைத் திருப்பிக்கொண்டான்.

'ஆமாம் ஸார், நான் சிறிது முன்னுல் சொன்னேனே, புரிஞ்சுதோன்னே...வெளியே பார்க்காதே அம்பி, கண்ணில் தூசி விழும், ரொம்ப தொந்திரவு கொடுக்கும், நேரே இங்கே பாருங்கோ...ஏன் எதற்கென்ருல் அவ அப்பன் பாட்டன் யார், எவர் என்று கேட்காதே. அப்பனையே தெரிந்துகொள்ள முடியாதென்ருல், பாட்டன் எங்கிருந்து குதிப்பான்?...ஆனுல் அப்பன் வைத்த ஆஸ்தியாகத்தானே ஒரு வேலையை மூன்று பேரும் கன்டிஷனோடு பிரித்துக் கொண்டார்கள். ஒரு முழு வேலையை இந்த பிரகஸ்பதிகள் மூன்ருகப் பிரித்துக் கொண்டார்கள். செய்தால் மூன்றுபேரும் சேர்ந்து செய்யவேண்டும், நிறுத்தினுல் மூன்றுபேரும்சேர்ந்து 'ரெஸ்ட்' எடுத்துக்க வேண்டும்...

'இந்த திருமூர்த்திகள் கிளம்பி ஊருக்கு வந்து ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொண்டு வேலைக்கு ஆரம்பித்தார்கள். ரொம்பநாள் செய்தார்கள் ஒற்றுமையாக... கிரேதா யுகம்...திரேதா யுகம்...துவாபர யுகம்...முழுசா மூன்று யுகங்கள் ஐயா...ஒரு யுகம் பாக்கி, இந்த கலியுகம்தான். வேலை கலைந்து சாப்பிட்டுத் தூங்க. கலி பிறந்ததே பாருங்க ஸார், நம்மைப் பிடித்து ஆட்டுகிற கலி, அதைத்தான் சொல்லுகிறேன். அதுதான் பாக்கி. அப்போது பிரும்மாவிற்கு கொஞ்சம் தூக்கம் கண்ணை அமட்டியது. காப்பி கீப்பி, பொடிகிடி, என்று என்ன வெல்லாமோ குடித்தும் போட்டும் பார்த்தான் போலிருக்கிறது...இதைத்தான்ஸார் அந்த புராணத்தில் நன்ருக சொல்லி இருக்கிறது. நான் படிச்சு இருக்கேன், ஒரு காலத்திலே பக்தி சிரத்தையாக, வேதாந்தம், புராணம், அது இது என்று என்ன வெல்லாமோ படித்து, முடித்து கண்டது என்ன இப்போது?...உங்களைத்தான், ஐயா நீங்களும் இதைக் கேட்டது உண்டா? கண்டது என்ன என்றுதான் சொல்ல முடிகிறதா? போகிற வழியும் தெரியவில்லை. வந்த வழியும் நன்ருகப் புரிந்த பாடில்லை. விட்டுத் தள்ளுங்கோ எல்லாவற்றையும் ஸார்...எனக்கென்ன வேண்டி கிடக்கிறது? எனக்கு நடக்க வேண்டியதெல்லாம் நடந்தாச்சு என்பது தானே இனிமேல்' என்று சொல்லிக்கொண்டிருந்தவர் கௌரி பக்கம் திரும்பி 'கௌரி மாரைக் கொஞ்சம் வலிக்கிறது கூஜாவிலிருந்து ஜலம் கொஞ்சம் எடு...இறங்கவேண்டிய ஸ்டேஷனும் வந்து கொண்டிருக்கிறது. அடுத்த ஸ்டேஷன். ஊரிலிருந்து கூட வண்டி வந்து இருக்கலாம்...' என்று அவளிடம் சொல்லி அவள் கொடுத்த தீர்த்தம் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு இடது மாரை ஒரு கையால் அமுக்கிக்கொண்டும் கனைத்துக்கொண்டும் அந்த வாலிபனைப் பார்த்து மறுபடியும் பேச்சை ஆரம்பித்தார்.

'சொல்லுகிறதெல்லாம் பாதியிலே விட்டுப் போகிறது. சொல்ல வந்ததை எல்லாம் எப்பவோ சொல்லியாகி விட்டது என்று கூடத் தோன்றுகிறது...ஆமாம் பிரும்மாவிற்குத் தூக்கம் வந்து விட்டது.. விஷ்ணுவைக் கேட்டான். ''கொஞ்சம் வேலையை நிப்பாட்டு. ஒரு சின்ன தூக்கம் போட்டு விட்டு ஓடிவந்து விடுகிறேன்'' என்ருன். சரிதான் நடுவிலும் கொஞ்சம் சாப்பிடலாம் என்று அந்தச் சாப்பாட்டு ராமன் சரி என்ருன்...சிவனைப் போய் கேட்டாலோ, அது ஒரு பைத்தியம். முடியவே முடியாது. நீ கேட்கிறதினுலே நிச்சயமாக முடியாது. இப்போதுதான் எனக்குக் குஷி கண்டிருக்கிறது' என்று சொல்லிவிட்டான். என்ன கெஞ்சியும் மிஞ்சியும் அவனிடம் பலிக்கவில்லை. கோபம் வருகிறது...ஆனுல் யார் யாரை என்ன செய்ய முடியும் ஸார்...இந்தக் காலத்திலே எல்லோரும் ஈசுவரர்கள் இல்லையா? எப்படியாவது துலைந்து போகிறது. அவா அவா தலை எழுத்துப்படி ஆகட்டும். நடக்கப் போவதுதான் நடந்தது, ஆகப் போகிறது தலை

எழுத்தாக, என நினைத்துக்கொண்டு பிரும்மா கண் அசந்து தூங்கிவிட்டான்...கேளுங்க ஸார் ரொம்ப வேடிக்கை...என்ன உங்களுக்கும் என்ன தூக்கமா?

'...சிவன் அழித்துக்கொண்டே விடாது வேலையை செய்துகொண்டிருந்தான். பிரும்மா படைத்ததை எல்லாம் குஷியில், ஒரு நொடியில் அழிந்து முடித்துவிட்டான். மேலும் மேலும் சிவன் அழித்துககொண்டே இருந்தான் ஸார். பிரும்மா தூங்கிக் கொண்டு இருக்கான். படைத்தது ஆன பிறகும் பிரும்மா படைக்காததையும் சேர்த்து அழித்துக் கொண்டிருக்கிறான் இவன். சாமிகளோன்னோ எல்லாம் செய்ய முடியும் அவர்களால். தூங்கிவிட்டு பிரும்மா தன் வேலைக்கு ஆரம்பித்தார். அதுதான் ஸார் உன்னை, என்னை, இந்த பொம்பிள்ளை, நாய், நரி...எல்லாவற்றையும் படைக்கிற பிரும்மா. சிருஷ்டி கொள்வதற்கு முன்னால்தான் அவைகள் சிவனால் அழிக்கப்பட்டு விட்டாச்சே. இப்படிப் படைக்கிறதிலே ஏதாவது பலன் உண்டா ஸார் சொல்லுங்கோ...என்ன பிறவிகள் நாம் எல்லாம் இந்தக் கலியில். துள்ளுகிற தரிதலைகள்தான். அந்தத் திருமூர்த்திகளின் போட்டி நம்மை எல்லாம் உயிர் இல்லாமல் தவிக்க விட்டுக் கொண்டிருக்கு. எல்லாம் தரிதலையாட்டம்தான் ஸார் இந்தக் காலத்திலே...வேறு என்ன சொல்ல இருக்கிறது ஸார்.'

ஸ்டேஷன் வந்துவிட்டது. வண்டி நிற்கப் போகிறது. 'கௌரி என்ன தூக்கமோ?...ஊர் வந்து விட்டது. சாமான்களை எல்லாம் எடுத்து வைத்துக் கொள்' என்று சொல்லிக்கொண்டே இருந்தவர், இடத்திலிருந்து எழுந்த இவனைப் பார்த்து 'என்ன ஸார் நீங்களும் இங்கேதான் இறங்கணுமா?... மறந்தே போய்விட்டதே பேரைக் கேட்க...உங்கள் பேர் என்ன ஸார்' என்றார்.

எழுந்து அவன் நின்றுகொண்டே 'சுப்பு... என்றான்.

'என்ன வேடிக்கை ஸார்! என் பேரே!... நானேதான் போல!...சின்ன வயதில் உங்களைப் போலத்தான் இருந்திருப்பேன்போல ஸார்...என்ன கௌரி நான் சொல்வது—சின்ன வயதில் அவரைப் போலதானே நானும்...என்ன மறதி போங்கோ... உனக்கு எப்படித் தெரியும் அப்போ என்னை...போட்டோ பிடித்துக்கொள்ள அப்போது மறந்துவிட்டேன்...என்ன ஸார் முகம் வேர்க்கிறது...மாத்தி அடித்த மணிக்கு திக்கு திசை மாறுவதுபோல. உங்களைப் பார்த்தால் காலமாறுதல் நன்றாகத் தோன்றுகிறது ஸார்...ஊருக்குப் போனதும் மறக்காமல் போட்டோ எடுத்து வைச்சுக்கோங்கோ...' என்று சொல்லிக்கொண்டே ஊர் வந்து விட்டது என்று வண்டி நிற்குமுன் எழுந்தவர் கொஞ்சம் தள்ளாடிச் சாய்ந்தார். பக்கத்தில் இருந்த கௌரியின் அணைப்பில் அகப்பட்டுக் கீழே விழாது தப்பினார்.

வாலிபன் அவ்விடத்தில் இருப்புக் கொள்ளாமல் மெதுவாக நழுவி மூலையில் காலியாக இருந்த ஒரு இடத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான்.

# நீயும் நானும்

(ஜே. ஸி. ஸ்குயர்)

கவித்வமே,
நீ ஒரு மலர் போல் அலர்ந்து விட்டாய்!

* * * *

நெடு நாட்களுக்கு முன்பு,
கபில நிறத் தோலைக் கண்டதும்,
உயிரற்ற உமியைப் போலே,
உணர்வுள்ள உயிர்ப்பை
அகத்துள் கொண்டது அது என
நான் உணர்ந்தேன்
முதல் வெண்முளை வெடிக்கும் வரை
நான் காத்திருந்தேன்.
ஆடையற்று விறைத்து வெளிறிய
கதிர் போல் அது முன் பாய்ந்தது.
வளர்ந்தது.
இத்துடன் இது முடியாது என
நான் அறிந்தேன்.

* * * *

பசுமை யுற்று நெடிதாய் நீ வளர்ந்த காலை
நான் எதுவும் சொன்னேனில்லை.
ஆயினும்,
நின் முகை நன் புறவிதழ் நீக்கி,
மோனமாய் விம்மி, தனிமுடி தூக்கி,
அகத்துறை வனப்பை மணத்தை எல்லாம்
ஒளிமிகு அலைகளாய், அழிவிலாச் சுகந்தமாய்
எங்கும் நிறைத்திடும் நன்னாள்
வரும் எனத் தன்னந் தனியனாய்
கனவு கண்டிருந்தேன்.
மண் தொட்டியில் உன்னை வைத்து
பக்குவமாய் போற்றினேன்.
கட்டிகள் உடைத்தும்,
நீரால் மண்ணை இளக்கியும்,
நின் வேர்கள் வளரவும், ஒளி நோக்கி ஓடவும்
நான் வகைகள் வகுத்தேன்.
ஞாயிற்றின் ஒளியும் மழையும் நீரும்
தந்து உதவிய போதே, உன்னை
வெப்பமும் வெள்ளமும் கொல்லாது காத்
தேன்
நீ என்னவள்; நானே அறிவன்
நின் வளர்வின் வழிகளை, நாட்களை.

* * * *

ஆனால்,
நீ என்னிலிருந்து வந்தவள் இல்லை.
நானோ—
எழுதும் கைக்கு ஒரு பேனா.
ஓடும் நதிக்கு ஒரு படுகை.
பாயும் ஒளிக்கு ஒரு சாளரம்.
எனவே,
உன்னை அழகு மலராய் ஆக்கிய
அந்த சக்திக்கு
பயத்துடன் பணிகிறேன் நானே.

தமிழில்:—வல்லிக்கண்ணன்

நவசித்தன்

# சித்தக் கடல்

## 1. வாழ்க்கைப் பாதை

வாழ்க்கை என்னும் வறண்ட பாலை வனத்திலே வழிநடந்து, சோர்ந்து இச்சிறு நிழலில் வந்து ஒதுங்கினேன்.

என் நெஞ்சு உலர்ந்து விட்டது. என் கண்கள் கண்டு, கண்டு களைத்து விட்டன.

என்னால் உனக்கு என்ன பயன்?

அநுபவம் என்ற செம்மட்டியால் அடியுண்டு காய்த்துப்போன என்னால், உனக்கு இனி, என்ன இன்பம் உண்டாகப் போகிறது?

ஆசைக் கனவு காணும் உன் கண்கள், மாறா இளமையின் பசுமையைக் காட்டி அழைக்கும் உன் இன்முகம், என்னிடத்திலே பொறாமைத் தீயைத் தான் எழுப்புகின்றது.

ஒரு காலத்திலே, என் நெஞ்சிலே ஆசை தளிர் விட்டுத் தழைத்து வளர்ந்ததுண்டு. ஆனால் இன்று அடிவேர் காய்ந்து கருகிவிட்டது; ஆவல் தீய்ந்து தீர்ந்து விட்டது.

நானும் கணக்கில்லாக் கனவுகள் காண்பேன். அந்தக் கனவுகள், கனவுகள்.

வாழ்க்கை என்னும் உண்மை மறுக்க முடியாத சத்தியமாகி விட்டது. கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதை தான், கண்ணுக்குத் தெரிந்த வரையில்.

ஆசை நிறைந்த நெஞ்சின் துடிப்புக் கேற்பத் துடிக்கும் உன் மார்க்கங்களால் பயன் என்ன? ஆழங்காண முடியாமல் சதா நிலையின்றி சலிக்கும் உன் அழகிய விழிகளால் யாது பயன்?

நான் வழி நடந்து களைத்து விட்டேன். ஆனால் கணமும் ஓய்வின்றி இன்னும் நடந்து கொண்டேயிருக்கவேண்டும். போகவேண்டிய ஊரை அறியேன்; போகும் வழியோ தெரியாது.

நம்பிக்கை என்னும் அழியா விளக்கும் அவிந்து விட்டது. கால்கள் மட்டும் நடந்து கொண்டேயிருக்கின்றன. வலியை உணரும் சக்தியையும் அவை இழந்து விட்டன.

பார்த்துப் பார்த்துத்தான் கண்கள் பார்க்கும் சக்தியை இழந்து விட்டனவே? இனி இருள் அவற்றை என்ன செய்யும்?

நெஞ்சிலும் இருள் கவிழ்ந்து கொண்டு விட்டது.

போகும் வழி வனமானால் என்ன, வனாந்திரமானால் என்ன?—

காலில் இடர்வது கல்லானால் என்ன, கடவுளானால் என்ன?

## 2. காலன் என்னும் கள்வன்

எல்லையற்ற அழகைத் தாங்கும் உன் முகம்; இனிய வீணையின் நாதமபோல் மதுரமான உன் குரல்; எண்ணற்ற இன்பக் கனவுகளைக் கொட்டிக் குவிக்கும் உன் கரு விழிகள்;

உன் நடையின் ஒயிலும், கொடிய விஷம் போன்ற உன் பார்வையின் குளுமையும், என்னை உன் அடிமைக்கும் அடிமையாக்கி விட்டன.

இன்பத் தளிர்களென இனிக்கும் உன் அதரங்களின் ஒவ்வொரு அசைவிலும், என் உயிர் இந்திரலோகத்தைப் போய்த் தொட்டு வருகிறது.

உன்மத்தம் பிடித்தவனைபோல் நான் நிலை பெயர்ந்து, நினைவழிந்து நிற்கின்றேன்.

ஆனால்—

பொன்மயமான கோபுரத்தின் உச்சியிலே வைத்த மாணிக்க விளக்கைப் போல், உன் முக அழகுக்கு, உன் உருவத்தின் ஒயிலுக்கு முத்தாய்ப்பே போல், இன்பக்கதிர்களை ஓயாமல் அள்ளிவீசும் உன் விழிகளின் கடையிலே துளி துயரம் தேங்கியிருப்பதேன்?

காலன் என்னும் கள்வனின் முதற் சூசகமா அது?

வறண்டு, இருண்டு—வரப்போகும் வாழ்க்கையென்னும் பாலைவனத்தின் முன்னெச்சரிப்பா அது?

பஞ்சு போன்ற உன் பாதத்தை நினைந்து நான் இப்போதே வருந்துகின்றேன்; நெஞ்சு புழுங்குகின்றேன்.

காலனுக்கு ஈரம் இல்லை; நெஞ்சு இல்லை, கடவுளுக்குக் கண் இல்லை.

## 3. கல்லும் கடவுளும்

கடவுள் என்று ஒன்று உண்டா?

கல் தான் கடவுளா?

அவனுக்குக் கண் உண்டா? கண் உண்டானால் நான் படும் கஷ்டம், உன்னை நினைந்து நான் ஓயாது உருகுவது அவன் கண்ணில் படுகிறதா?

உன்னை என் கண்ணில் காட்டி, என் நெஞ்சில் ஆசைப் புயலை எழுப்பி வேடிக்கை பார்க்கிறானே இது அவன் விளையாட்டா?

கடவுளுக்கு விளையாடத் தெரியுமா? அவனுக்கு ஆனந்தம் கூட உண்டா? ஆனந்தம் உண்டானால் துக்கத்தையும் அவன் அறிவான். என் துக்கத்தை அவன் அறிவான்.

இவ்வளவு நேரம் என் துயரத்தின் வேகத்தை அவன் உணர்ந்திருப்பான்.

இல்லை.

அவனுக்கு துன்பமும் தெரியாது, இன்பத்தையும் அறியான்.

கடவுளுக்குக் கண் இல்லை; மனம் இல்லை; உயிரே இல்லை.

கல் கடவுள் இல்லை, கடவுள்தான் கல்.

## 4. கனவு

நித்த நித்தம் கண்ணை மூடிக் கனவு கண்டு எதைக் கண்டாய் என்று கேட்கிறாய்?

ஓடி யாடி, உழைத்துச் சோர்ந்தபின் உடம்பு வலியாற கள் உண்டு.

மன ஓட்டத்திற்கு மருந்து ஏது?

ஓயாத ஓட்டம்; ஒன்றுக்கும் உதவாத உழைப்பு; அன்னத்துக்குக் கோடி இரைச்சல்; சண்டை, பூசல், மண்டை உடைதல்—

இதுதான் நினைவு லோகத்தின் நித்திய லட்சணம்.

கண நேசக்கனவில் யுககாலத்து நினைவை மறப்பேன்.

எட்டாத உயரங்களை எட்டிப் பிடிக்கலாம்; எண்ணாத எண்ணங்களை எண்ணிப் பறக்கலாம்; கிட்டாத பொருள்களைக் கையால் தொட்டு எடுக்கலாம்.

நீ வைத்தது சட்டம்.

காலமும் உன் கையில் அடக்கம்.

கனவின்றி நினைவு இல்லை.

நினைவு இன்றிக் கனவு உண்டோ?

## 5. பிறப்பும் இறப்பும்

பிறந்தவன் இறப்பது நிச்சயம். இறந்தவன்—?

மேடு இருந்தால் பள்ளமும் உண்டு என்கிறாய்? மேட்டை வெட்டிப் பள்ளத்தில்போட மனிதனால் முடியும். ஆனால்—?

மேடு எது, பள்ளம் எது?

பிறப்பு எது, இறப்பு எது?

பிறப்பதும் இறப்பதும் உடலா, உணர்வா?

நான் பிறந்த உடனே உன்னை உணர்ந்து விட்டேன்.

அது எப்படி என்று கேட்கிறாய்?

அமுது சுரந்து என் ஆவல் தீர்த்த அன்னையின் நிறைமுகத்திலே உன் கண்ணின் ஒளியைக் கண்டேன்.

புவியதிர இடி இடித்துக் கண்ணைக் குருடாக்கிய ஒளிக்கொடியின் அசைவிலே உன் முறுவலின் மோஹனத்தைக் கண்டேன்.

எட்ட எட்டத் தொலையாத, எண்ணவும் முடியாத வானவளையத்தின் வளைவிலே உன் உருவ ஒயிலின் சாயலைக்கண்டேன்.

நான் பிறக்கும்போதே உன்னை உணர்ந்துவிட்டேன். இறக்கும்போதும் உன் உணர்வை மறக்க மாட்டேன்.

ஆழங்காண முடியாது அறுபது நாழிகையும் அலைமோதிக் கொக்கரிக்கும் நீலக்கடலும் ஒருநாள் அலை நின்று, வற்றிச் சுருங்கி தரையாகி விடும்.

தீ யெரிந்து தினமும் கால தேவனின் தேரை உருட்டி ஓடும் கதிரவனும் ஒரு நாள் கருகிச் சாம்பலாகி விடுவான்.

காற்றே நின்று விடலாம்.

கடவுளே அழிந்து விடலாம்.

ஆனால்—

உன்னைப் பற்றிய என் உணர்வை அழிக்க எவராலும் ஆகாது. என் உணர்வை, அந்த உணர்வின் உருவை, அந்த உருவின் இனிமையை அகற்ற எவராலும் முடியாது.

—பிறந்தபின் இறந்தால் என்ன, இறந்தபின் பிறந்தால் என்ன ?

### மாறுதல்

காலையில் பூத்த பூ மாலையில் வாடுவதேன் ?

கண்ணெதிரே வண்ண மோஹன முறுவல் தரித்து, கைம்மாறு கருதாது, காற்றெல்லாம் மாய மாய் வாரி இறைத்து, தலை நிமிர்ந்து நின்ற பூ, மாலையானதும் தலை குனிந்து, வாடி வதங்கி, கசங்கிக் காகிதமாய் வீழ்வானேன் !

அதுவா இயல்பு ? அதுவா இயற்கை ?

காரணமின்றிக் குறைவதுதான் இயல்போ ?

குற்றமின்றித் தண்டிக்கப்படுவதுதான் இயற்கை நீதியோ !

மாறுதல் இயற்கை என்கிறாய் ?

அந்த இயற்கை என்னும் இருப்புச் சட்டத்துக்குமட்டும் மாறுதல் கிடையாதா ?

அந்த சட்டத்தின் அதிபதியான கடவுளுக்கு மாறுதல் இல்லையா ?

அந்த ஒளிவண்ணப பூவின் உடல் மாறிவிட்டது. ஆயின் அதன் நறுமணம், அந்த மணத்தின் இனிய நினைப்புமட்டும் மாறவில்லையே, அது ஏன் ?

உன் உடல் மறைந்து விட்டது. உன்னுடைய மெல்லிய உரு ஓடிவிட்டது. உனது நினைவுமட்டும் என்னை ஓயாமல் வாட்டுகிறதே ?

நினைப்புக்கு மாறுதல் கிடையாதா ?

உன்னைப் பற்றிய உணர்வை, உன் ஒளிவிடு முகத்தின் நறுமணத்தை இயற்கையின் சட்டம் என்றுமே தொடாதா ?

கடவுள் அறிந்துவிட்டான். கடவுளைப் பற்றிய நினைப்புதான் ஆட்சி செய்கிறது.

நினைப்புதான் இயற்கையின் நியதியா ?

—உன்னைப்பற்றிய இனிய உணர்வுதான் கடவுளா ?

### அன்னையின் தோட்டம்

என் அன்னையின் தோட்டத்தில் செடிகள் அழிந்து கிடந்தன. பொன்னைச் சொரியும் கொன்னை மலரும், எண்ணத்தைக் களிவெறியூட்டிக் கிலுக்க வைக்கும் பல வண்ண மலர்களும் நிறைந்த அன்னையின் தோட்டம் அழிந்து கிடந்தது.

பசுமை பூண்டு புது வண்ண ஆடை உடுத்திச் சிரித்துக் களிக்கும் தோட்டம் பாழடைந்துகிடந்தது.

காய்ந்த செடிகளும் கருகிய மலர்களும் உள்ளத்தை நோகச் செய்தன.

எங்கும் வறட்சி. எங்கும் காய்ச்சல்; எங்கும் எண்ண முடியாத துன்பம்.

துக்கம் நெஞ்சை அடைக்க. துன்பம் கண்ணில் நீர் தேக்க அடிமேல் அடிவைத்து வழி நடந்தேன்.

அதோ !

வடக்கு மூலையிலே ஒரு பச்சைவண்ணப் பசுந் திட்டு !

அதன் மையத்தில் ஓர் நீண்ட நெடுந் தனிச் செடி. வையமெல்லாம் அழிந்தாலும் வாழ்விக்க நான் உள்ளேன் என்று சொல்வதைப்போல், செம்பட்டு முடியசைத்து கம்பீரமாய் நின்றது.

மொட்டவிழ்ந்த ரோஜா மலர் தன் மோகச்சிரிப்பாலே என்னைத் தொட்டு இழுப்பதுபோல் என் உள்ளம் கவர்ந்து அழைத்தது.

அந்தப் பட்டுச் சிரிப்பழகில் பறி கொடுத்தேன் நெஞ்சமெல்லாம்.

### அன்பே நீ யார்

அன்பே, நீ யார் ?

வாழ்க்கை என்னும் வறண்ட பாதை நீண்டு கிடந்தது. கண்ணுக்குத் தெரியும் வரையில் கல்லும் முள்ளும் நிறைந்து கிடந்தன.

(113-ஆம் பக்கம் பார்க்க)

# ஹல்லோ - -

**(104ம் பக்கத் தொடர்ச்சி)**

தான் சிலசமயம் எனக்கு தோன்றுகிறது. ஹல்லோ- யாரங்கே! எனக்கு பீதி. என்னை இங்கே இருந்து வெளியேவிட முயன்று பாரேன். அந்த முட்டாள் கள் வீலிங்லேயிருந்து வந்து, தங்களை வீரர்களாக நினைத்துக்கொண்டு வெறியாக நடந்துப்பார்களே என்கிற பீதிதான். நான் இங்கே இருந்துவெளியேற வழி செய், கேட்டி.

பெ: என்ன செய்கிறதென எனக்குத் தெரிய வில்லையே. கதவை வேண்டுமானால் உடைத்துத் தள்ளலாம் நான்.

வா: முடியாது. அதை செய்ய முடியாது உன் னாலே. வெளியே சம்மட்டி, ஏதாவது இருக்கா?

பெ: ஒரு விளக்குமாறுதான். அதையும் அவர் கள் வைத்துப் பூட்டி இருக்கலாம்.

வா: போய் ஏதாவது கிடைக்கிறதா பாரு.

பெ: சரி. (போகிருள்).

வா: ஹல்லோ—யார் அங்கே! ஹல்லோ— யார் அங்கே! (தயக்கம்) ஹல்லோ—யார் அங்கே! (தயக்கம்) என்னை சிறையில் போடுகிறது! (வெறுப் புடன்) பலாத்காரமாம்! பலாத்காரம்! பிறந்த நல்ல வை எல்லாத்தையுமே அவர்கள் கற்பழிக்கிருர்களே! அவருக்கு பக்கவாட்டில் வலிக்கிறது. அவனைப் பார்த்து சிரிக்கிருர்கள் அவர்கள். நாளைக்கு ஐம்பது சென்ட்கள். அற்ப நீசப் பேர்வழிகள். அவர்கள் வழி யில் கிடைத்த ஒரே நல்ல பொருளை துன்புறுத்திக் கொண்டு. (திடீரென) ஹல்லோ—யார் அங்கே.

பெ: (திரும்பி) எதுவும் இல்லை இங்கே வெளி யே. இரவானதாலே எல்லாத்தையும் வைத்துப் பூட்டிவிட்டார்கள்.

வா: ஏதாவது சிகரெட்?

பெ: எல்லாம் பூட்டிக் கிடக்கு—மேஜை டிரா யர்கள். அலமாரி கதவுகள் எல்லாம்.

வா: ஒரு சிகரெட்டாவது எனக்கு அவசியம் வேண்டும்.

பெ: ஒரு பாக்கெட் எங்கேயாவது கிடைக்கு மா பார்க்கிறேன். நினைக்கிறேன், மருந்துக் கடை திறந்திருக்கும். சுமார் ஒரு மைல் தூரம் இருக்கு.

வா: ஒரு மைலா? அவ்வளவு நேரம் நான் தனியாக இருக்க விரும்பவில்லை.

பெ: ஓட்டமாகவே போய் ஓட்டமாகவே திரும்பிவிடுவேன்.

வா: வாழ்கிறவர்களிலேயே இனிமையான பெண் நீ.

பெ: எந்த ரகம் உனக்கு வேண்டும்?

வா: ஓ, எதானாலும் சரி—'செஸ்ட்டர் ஃபீல்ஃட், 'ஒட்டகம்,' 'லக்கி ஸ்டிரைக்'—எந்த வித மானாலும் சரி.

பெ: போய் ஒரு பாக்கெட் வாங்கிவருகிறேன். (போக திரும்புகிருள்).

வா: பணம் வேண்டாம்?

பெ: கொஞ்சம் பணம் இருக்கு. ஒரு குவார்ட் டர் மிச்சம் பிடித்து வைத்திருக்கிறேன். ஓட்டமாக போய் வருகிறேன். (போகப் போகிருள்.)

வா: இங்கே வா.

பெ: (அவனிடம் போய்) என்ன?

வா: உன் கையை கொடு. (அவள் கையை பிடித்து சிரித்துக்கொண்டே அதை பார்க்கிருன். உயர்த்தி முத்தமிடுகிருள்.) எனக்கு சாவு பயம்.

பெ: எனக்கும்தான் அப்படி.

வா: நான் பொய் சொல்லவில்லை. எனக்கு ஏற்படப் போகிறதைப் பற்றி கவலை இல்லை. ஆனல் கடவுள்—கைவிட்ட—டவுனை இதுக்கு வந்து உன்னை பார்க்க யாரும் எப்பவுமே வரமாட் டார்களே என்கிற பீதிதான். உனக்கு அது பழக்க மாகிவிடும், நீ பொருட்படுத்தமாட்டாய் என்கிற பயம். நீ ஃபிரிஸ்கோவுக்கே போக முடியாது, அங்கே எல்லோரும் உன்னையே திரும்பிப் பார்க்க ஏற்படாதே என்கிற பயம்தான். கவனி—போய் ஒரு துப்பாக்கி கொண்டு வா எனக்கு. ஏன்னல், அவர்கள் வந்தால் அவர்களை நான் கொன்று விடு கிறேன். அவர்களுக்கு விஷயம் புரியவில்லை. ஒரு துப்பாக்கி எனக்கு சம்பாதித்துத் தா.

பெ: என் அப்பாவின் துப்பாக்கியை எடுத்து வர முடியும். அவர் ஒளித்திருக்கிற இடம் தெரியும் எனக்கு.

வா: போய் கொண்டுவா. சிகரெட் கிடக்கட் டும். வழிநெடுக ஓடு (தயக்கம். ஆழ்ந்து சிரித்துக் கொண்டு) ஹல்லோ, கேட்டி.

பெ: ஹல்லோ. உன் பெயர் என்ன?

வா: ஃபோட்டோ—ஃபினிஷ் என்று என்னை அழைப்பார்கள் அவர்கள். என் குதிரைப் பந்தய ஓட்டம் எல்லாம் ஃபோட்டோ—முடிவு ஓட்டமா கத்தான் இருக்கும். அது என்னது என்று உனக்கு தெரியாது. அதாவது என் குதிரை ரொம்ப நெருங்கி இருக்கும் என்கிற அர்த்தம். எந்த குதிரை ஜயித்தது என்று சொல்ல பந்தயம் முடிந்த பிறகு ஃபோட் டோவை பார்த்துத்தான் சொல்லமுடியும், அவ் வளவு அடுத்து இருக்கும். நான் கட்டுகிற ஒவ் வொரு பந்தயமும் இப்படி ஃபோட்டோ—முடிவு பந்தயமாகத்தான் முடியும், என் குதிரை ஒரு போ தும் ஜயிக்காது. அது என் துரதிர்ஷ்டம், காலமெல் லாம். அதனலேதான் என்னை அப்படி கூப்பிடுகிருர் கள். நீ போகுமுன் ஒரு தடவை சொல்லு.

பெ: ஃபோட்டோ—ஃபினிஷ்.

வா: இங்கே வா. (பெண் நெருங்கிப் போ கிருள், அவள் முத்தமிடுகிருள்) சரி, ஓடு வழிநெடுக, ஓடு.

பெ: ஓடுகிறேன். (பெண் திரும்பி ஓடுகிருள். வாலிபன் ஹால் நடுவில் வெகுநேரம் நிற்கிருன். பெண் திரும்பி ஓடிவருகிருள். அழுகைவரும் நிலை யில்) நான் பயப்படுகிறேன். உன்னை மறுபடியும் பார்க்கமாட்டேன் என்கிற பயம்தான். நான் திரும்பி வந்து, நீயும் இங்கே இல்லாவிட்டால் நான்—

வா: ஹல்லோ—யாரங்கே!

பெ: இந்த டவுனில் அவ்வளவு தனிமை. எந்த நேரமும் தூசியை கிளப்பிவிட்டு புல்வெளிகளில் வாரி அடிக்கிற இந்த தனிமையான காற்றை தவிர வேறெதுவும் இல்லை இங்கே. நான் இங்கேயே இருந்து விடுகிறேன். அவர்கள் உன்னை கொண்டு போக விடமாட்டேன்.

வா: கவனி, கேட்டி. நான் சொல்கிறதை செய். போய் அந்த துப்பாக்கியை எடுத்துக்

கொண்டு திரும்பி வா. அவர்கள் வராமலே இருக்கவும் கூடும். துப்பாக்கியை ஒளித்து வைக்கிறேன். என்னை அவர்கள் வெளியே விட்டதும் திரும்ப கொண்டுபோய் இருந்த இடத்தில் நீ வைத்துவிடலாம். பிறகு நாம் போய்விடலாம். ஆனால் அவர்கள் வந்தால் நான் அவர்களை கொன்றுவிடுகிறேன். இப்போது, சீக்கிரம் போ—

பெ: சரி, (தயக்கம்) உன்னிடம் ஒன்றை சொல்ல விரும்புகிறேன்.

வா: சொல்லு.

பெ: (ரொம்ப மிருதுவாக) நான் திரும்பி வரும்போது நீ இங்கே இல்லாவிட்டால், சரி, துப்பாக்கி என்னிடம் இருக்கும், அதைக் கொண்டு என்ன செய்கிறது என்பதும் தெரியும்.

வா: துப்பாக்கியை உபயோகிக்கத் தெரியுமா உனக்கு?

பெ: . எப்படி என்று தெரியும்.

வா: அசடாக இருக்காதே. (செருப்பைக் கழற்றி சில நாணயங்களை வெளியே எடுக்கிறான். அசடாஇருக்காதே 'என்ன? இதோ கொஞ்சம் பணம். எண்பது டாலர். இதை எடுத்துக்கொண்டு ஃபிரிஸ்கோவுக்கு போ. சுற்றி தேடி யாரையாவது கண்டுபிடி—உயிர்ப்பும் பாதி யளவுக்காவது மனித சுபாவமும் உள்ள எவரையாவது. என்ன? வாக்குறுதி தா எனக்கு—நீ திரும்பவும் நான் இங்கே இல்லையானால் தூக்கி எறிந்துவிடு துப்பாக்கியை. ஃபிரிஸ்கோவுக்கு போய்விடு. தேடி யாரையாவது கண்டுபிடி.

பெ: யாரையும் தேடிக் காண நான் விரும்பவில்லை.

வா: (விரைவாகவும் நிராசையுடனும்) கவனி. நீ திரும்பவும் நான் இங்கே இல்லையானால் நான் வெளியே தப்பிவிடவில்லை என்று உனக்கு எப்படித் தெரியும்? இப்போது நான் சொல்கிறதை செய். நான் உன்னை ஃபிரிஸ்கோவில் சந்திக்கிறேன். என் இன்னொரு செருப்பில் இரண்டு டாலர் வைத்திருக்கிறேன். உன்னை நான் ஃபிரான்ஸிஸ்கோவில் சந்திக்கிறேன்.

பெ: (வியப்புடன்) ஸான் ஃபிரான்ஸிஸ்கோ?

வா: அதேதான்—ஸான் ஃபிரான்ஸிஸ்கோ. உனக்கும் எனக்கும் அதுதான் சொந்தம்.

பெ: ஸான் ஃபிரான்ஸிஸ்கோ மாதிரி எதாவது ஊருக்கு போகத்தான் ஆசை எனக்கு—ஆனால் எப்படி நான் தனியே போவது?

வா: சரி, இனி நீ தனியாகவே இல்லை, தெரிகிறதா?

பெ: அது எப்படி இருக்கும்? கொஞ்சம் சொல்லு.

வா: (ரொம்ப விரைவாக, ஆரம்பத்தில் பரபரப்புடன், ஆனால் போகப் போக மெதுவாயும் நீளத்துப் பார்த்தும், சிரித்துக்கொண்டும். அவன் பேசுகிறபோது பெண் அவனை நெருங்கிப் போகிறாள்) ஆமாம், முதலில்—அது பசிபிக்கில் இருக்கிறது—சுற்றி எங்கு கடல் தண்ணீர். குளிர்ந்த பனி, கடல் பறவைகள். உலகம் எங்கும் இருந்து வரும் கப்பல்கள். அங்கே எழு குன்றுகள், சின்ன தெருக்கள் மேலும் கீழும், சுற்றி, எங்கேயும் போகும். ஒவ்வொரு இரவும் பனி எச்சரிக்கை ஊதல்கள் கத்தும். ஆனால் அவை உனக்கும் எனக்கும் கத்தாது.

பெ: வேறே என்ன?

வா: அவ்வளவுதான், நான் நினைக்கிறேன்.

பெண்: ஸான் ஃபிரான்ஸிஸ்கோவில் ஜனங்கள் வேறுமாதிரியாக இருப்பார்களா?

வா: ஜனங்கள் எங்கேயும் ஒரேமாதிரிதான். யாரையாவது காதலிக்கிற போதுதான் வேறுவிதமாக இருப்பார்கள். அது ஒன்றுதான் அவர்களை மாற்றிக் காட்டுகிறது. ஃபிரிஸ்கோவில் அதிகம் பேர்கள் யாரையாவது காதலிக்கிறார்கள். அவ்வளவுதான்.

பெ: நான் உன்னை காதலிக்கிற மாதிரி எங்கே இருக்கிற யாரும் எவரையும் காதலிக்கவேமாட்டார்கள்.

வா: (உலகத்தை பார்த்து கத்துகிற மாதிரி) பார்த்தாயா! நீ இதை சொல்லிக் கேட்டு ஒருவன் இறக்கலாம், இருந்தும் ஆட்டத்தில் எல்லாரையும் முந்தினவனாக இருக்க முடியும். இப்போது போ சீக்கிரம். மறந்துவிடாதே. நீ திரும்பவும் நான் இங்கே இல்லையானால் ஸான் ஃபிரான்ஸிஸ்கோவுக்கு போய்விடு. அங்கேதான் வாய்ப்பு உனக்கு. நான் சொல்கிறது படுகிறதா உனக்கு?

(பெண் அவனையே பார்த்து ஒரு கணம் நின்று பிறகு பின்னரித்து திரும்பி ஓடுகிறாள். வாலிபன் சங்கடத்துடன் அவளையே உறுத்துப் பார்க்கிறான், சிரித்துக்கொண்டு. பிறகு அவள் உருவத்திலிருந்து பார்வையை திருப்பி கூண்டில் உள்ள சிங்கம்போல நடக்கிறான். கொஞ்சம் கழித்து அவன் சட்டென உட்கார்ந்து தன் தலையை கைகளில் புதைத்துக் கொள்கிறான். சற்று தூரத்திலிருந்து பல மோட்டார்கள் வரும் சப்தம் கேட்கிறது. ஒரு விநாடி அவன் கவனித்துவிட்டு அவை ஏதானாலும் சரி என்று சப்தத்தின் சம்பந்தத்தை அசட்டை செய்துவிடுகிறான். பல மோட்டார் கதவுகள் படீரென சாத்தப்படுகின்றன. இதையும் அசட்டை செய்துவிடுகிறான் அவன். ஒரு மரக் கதவு சாவியால் திறக்கப்படுகிறது. மூடப்படுகிறது. ஹாலில் காலடிகள் சப்தம் கேட்கிறது. நிதானமாகவும் அலட்சியமாகவும் அகம்பாவத்துடனும் நடந்து ஒருவன் உள்ளே வருகிறான். வாலிபன் பாய்ந்து எழுந்து அவனைப் பார்த்து கத்துகிறான் அவன் பயந்து போகும்படியாக.) நீயும் ஒரு சிறைக் காவலாளியா. கேட்கிறேன். உன் வேலையை சரியாக செய்யக்கூடாது? அதுக்குத்தானே உனக்கு சம்பளம், இல்லையா? இப்போது என்னை இதைவிட்டு வெளியேற விடு.

வந்தவன்: ஆனால் நான் சிறைக் காவலாளி இல்லையே.

வா: யெ, சரி. அப்போது யாரு நீ?

வந்: நான் தான் கணவன்.

வா: எந்த கணவனைப் பற்றி பேசுகிறாய்?

வந்: எந்த கணவன், உனக்கு தெரியுமே.

வா: ஹேய்! (தயக்கம். அவனை பார்த்துக் கொண்டே) நேற்று இரவு என் தலையில் அடித்த பேர் வழி நீ தானா?

வந்: நான்தான்.

வா: (ஆத்திரத்துடன்) மனிதர்கள் மண்டையை தாக்குகிற வேலையாகவே சுற்றுகிறாயே, என்னது?

வந்: ஓ. எனக்கு தெரியாது அது. சுற்றுகிறேனா, என்ன அர்த்தம்—நீ செய்கிற மாதிரியா?

வா : (தலையை தேய்த்துக்கொண்டு) என் தலையை காயப்படுத்தி விட்டாயே. யார் மண்டையிலும் அடிக்க உனக்கு உரிமை கிடையாது.

வங் : (திடீரென கோபமாக, கத்தி) என் கேள்விக்கு பதில் சொல்...என்ன அர்த்தம் நீ சொல்கிறதுக்கு?

வா : கவனி, உன்னைத்தான்—நான் இங்கே பூட்டப்பட்டு இருக்கிறதினாலே என்னைப் பார்த்து கத்திண்டு இருக்காதே.

வங் : (இகழ்ச்சியாய்,மெதுவாக) நீ ஒரு நாய்.

வா : யெ, சரி, உனக்கு கொஞ்சம் விஷயம் சொல்கிறேன். நீ தான் கணவன் என்று நினைக்கிறாய். நீ ஒரு உதவாக்கரை கணவன். (மெதுவாக) இன்னும் சொல்லப்போனால், உன் மனைவி—அப்படி அவளை நீ அழைக்க விரும்புகிறதானால்—அலைகிற ஒரு நாடோடி தெருவுக்குச் சொந்தமான அவளை நீ ஏன் தெருவில் விரட்டிவிடவில்லை?

வங் : (கைத்துப்பாக்கியை உருவி) வாயைமூடு.

வா : யெ? ஹூம், சுடு—(மெதுவாக) வேடிக்கையை கெடுத்து விடு. உன் கூட்டாளிகள் என்ன நினைப்பார்கள்? ஏமாந்து போவார்கள், மாட்டார்களா? ஏற்கெனவே செத்துப்போனவனை தூக்கில் போடுகிறது என்ன வேடிக்கை? (அந்த மனிதன் துப்பாக்கியை தள்ளி வைத்து விடுகிறான்) அதுதான் சரி. இப்போது கொஞ்சம் வேடிக்கை நடத்தலாம், நீ செய்யப்போகிறதை எனக்கு சொல்லலாம். அதுக்காகத்தானே நீ இங்கே வந்திருக்கிறது. இல்லையா? சரி, நீ எனக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நீ செய்யப்போகிறதும் தெரியும் எனக்கு. எனக்குத் தெரிந்த பத்திரிகைகளை படித்திருக்கிறேன். அவர்களுக்கு வேடிக்கை. கூட்டமாக ஒருவன் மேலே விழுந்து தாக்குவார்கள், இல்லையா? அவன் உடைகளை கிழித்து எறிந்து உதைப்பார்கள். இல்லையா? பெண்களும் சிறு குழந்தைகளும் சுற்றி நின்று பார்ப்பார்கள்; இல்லையா? சரி. இந்த விளையாட்டை நீ ஆரம்பிக்குமுன் நான் உனக்கு சில விஷயம் சொல்லப்போகிறேன். அவை வந்து உன்னை உன் சகாக்களுடன்—மற்ற வீரர்களுடன் வீட்டுக்கு திருப்பி அனுப்பிவிடப் போகிறது என்பதுக்காக இல்லை. இல்லை, உங்களுக்கு கொடுமை செய்யப்பட்டிருக்கிறது. அன்னியன் ஒருவன் டவுனுக்கு வந்து உங்கள் பெண்களை மானம் குலைத்து விட்டான். உங்கள் தூய, பேதை, கற்பரசிகளை. நீங்கள் எல்லாம் இதுக்கு எதாவது சரி செய்தாக வேண்டும். நீங்கள் மனிதர்கள், சுண்டெலிகள் இல்லை. நீங்கள் குடும்ப நிர்வாகிகள், உங்கள் குழந்தைகளை அடிப்பீர்கள். (திடீரென) கவனி—உன்னைத்தான். அவள் உன் மனைவி என்பதே தெரியாது எனக்கு. வேறு யாருடைய மனைவி என்கிறதும் தெரியாது.

வங் : பொய்யன் நீ!

வா : சிலசமயம்—யாருக்காவது அது கொஞ்சம் நல்லது செய்யுமானால்—ஆனால் இந்த தடவை இல்லை. அதைப்பற்றி கேட்க விருப்பமா உனக்கு? (அவன் பதிலே சொல்லவில்லை) சரி, சொல்கிறேன். நான் அவளை சாப்பாட்டு அறையிலே சந்தித்தேன். அவள் உள்ளே வந்து பக்கத்தில் உட்கார்ந்தாள். இடம் நிறைய இருந்தது. ஆனாலும் என் பக்கத்தில் உட்கார்ந்தாள். யாரோ கிராமபோன் மிஷினில் நிக்கல் நாணயத்தை போட்டிருந்தார்கள். ஒரு பயல் அதில் 'நியூஸான் அன்டானியோ ரோஸ்' பாட்டை பாடிக்கொண்டிருந்தான். சரி, அவள் பாட்டைப் பற்றி பேச ஆரம்பித்துவிட்டாள். பரிமாறியிடம் தான் அவள் பேசுவதாக நான் நினைத்தேன், ஆனால் அவன் பதிலே சொல்லவில்லை. எனவே கொஞ்சம் போனதும் நான் பதில் சொன்னேன். இப்படித்தான் நான் அவளை சந்தித்தது. அதைப்பற்றி நான் எதுவுமே நினைக்கவில்லை. அதைவிட்டு சேர்ந்து புறப்பட்டு நடக்க ஆரம்பித்தோம். அவள் சொல்லி முதலில் எனக்கு தெரிந்தது, இங்கேதான் நான் இருக்கிறேன்.

வங் : அற்ப பொய்யன் நீ!

வா : கேட்க விருப்பமா, இல்லையா? (அவன் பதிலே சொல்லவில்லை) சரி. அவள் உள்ளே வரச் சொன்னாள் என்னை. அவள் மனதில் எதாவது இருந்திருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். இதுவோ அதுவோ இரண்டுக்கும் வித்யாசம் இல்லை என் மட்டுக்கு. அவள் தனியாக இருந்தால், சரி, இல்லை—அதுவும் சரி.

வங் : எவ்வளவு அற்ப பொய் சொல்கிறாய் நீ!

வா : உண்மையைத் தான் நான் சொல்கிறேன். உன் மனைவி வெளியே உன் சகாக்களுடன் இருக்கிறாளோ? சரி, கூப்பிடு உள்ளே அவளை. அவள், நீ—உங்க யார் மேலும் எனக்கு ஒன்றும் கிடையாது. அவளை உள்ளே கூப்பிடு. சில கேள்விகளை கேள். அவளை காதலிக்கிறாயா நீ? (அவன் பதிலே பேசவில்லை) சரி, அது ரொம்ப மோசம்.

வங் : ரொம்ப மோசம், எதை சொல்கிறாய்?

வா : இது மாதிரி நடந்தது முதல் தடவையாக இருக்காது என்று சொல்கிறேன்.

வங் : (வேகமாக) மூடு வாயை!

வா : ஓ, உனக்கு இது தெரியும். எப்பவும் தெரிந்திருக்கு உனக்கு. உன் சகாக்களிடம் உனக்கு பயம், அவ்வளவுதான். என்னை பணம் கேட்டாள். அவள் விரும்பினது அதுதான். அவளுக்கு பணத்தை கொடுத்திருந்தால் இங்கு வந்திருக்கமாட்டேன்.

வங் : (மெதுவாக) எவ்வளவு கேட்டாள்?

வா : எவ்வளவு என்று நான் கேட்கவில்லை. நான் தப்பு பண்ணிவிட்டதாக அவளிடம் சொன்னேன். அவளுக்கு பணம் கொடுக்காவிட்டால் சங்கடம் உண்டாக்குவதாக சொன்னாள். சரி, பேரப் பேச்சு எனக்கு பிடிக்காது. மிரட்டலுக்கு ஆளாகிறதும் பிடிக்காது. என்னை விட்டு தொலைந்துபோகச் சொன்னேன் அவளை. அடுத்தபடியாக எனக்கு தெரிந்தது, அவள் வீட்டைவிட்டு வெளியேபோய் கத்திக்கொண்டிருந்தாள். (தயக்கம்) இப்போது நீ அங்கே போய், என்னை வேறு சிறைக்கு கொண்டு போய்விட்டதாக அவர்களிடம் சொல்லி—வீட்டுக்குப்போய் மூட்டையைக் கட்டிக்கொண்டு அவளை விட்டே போய்விடக்கூடாது? நீ நல்ல ஆசாமி ஆச்சே. உன் சகாக்களிடம் பயம் உனக்கு. (அவன் துப்பாக்கியை மீண்டும் வெளியே இழுக்கிறான். அவன் ரொம்ப பயந்து போயிருக்கிறான். வாலிபனை நோக்கி ஒரு எட்டு முன்வைத்து மூன்று தடவை சுடுகிறான். வாலிபன் முழங்கால் மடிய சரிகிறான். அவன் திரும்பி திகிலுடன் ஓடுகிறான்) ஹல்லோ—யார் அங்கே! (அவன் முன் வளைந்து கிடக்கிறான். பெண் உள்ளே ஓடி வருகிறாள். அவளைப் பார்த்துக்

கொண்டே சட்டென நிற்கிருள்.)

பெ: தெருவில் கொஞ்சம் பேர்கள் இருந்தார்கள், ஆண்கள், பெண்கள், சிறுவர்களும்—அதனுலே ஒரு ஜன்னல் வழியாக பின்பக்கமாக வந்துவிட்டேன். துப்பாக்கி அகப்படவில்லை. எங்கேயும் தேடிவிட்டேன், கண்டுபிடிக்க முடியவில்லை. என்ன விஷயம்?

வா: ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை. எல்லாம் சரிதான். கவனி, கவனி குழந்தை, இதைவிட்டு வெளியேறிவிடு. உள்ளே வந்தவழியே வெளியே போய்விடு. ஓடு—பிசாசாக ஓடு—இரவு முழுக்க ஓடு. வேறொரு டவுனுக்குப் போ. ரயிலேறி விடு. கேட்கிருயா நான் சொல்கிறதை?

பெ: என்ன நடந்து விட்டது?

வா: போய் விடு—இங்கிருந்தே போய் விடு. எந்த ரயில் போகிறதோ அதை பிடி—ஃப்ரிஸ்கோவுக்கு பிறகு போய்க்கலாம்.

பெ: (விம்மல் வர) நீ இல்லாமல் நான் எங்கேயும் போக விரும்பவில்லை.

வா: நான் போக முடியாது. ஒன்று நடந்து விட்டது (அவளை பார்க்கிருன்) ஆனுல் நான் எப்பவும் உன்னுடன் இருப்பேன்—அட கடவுளே, எப்பவும்! (அவன் முன் விழுகிருன். பெண் அவன் பக்கத்தில் நிற்கிருள். லேசாக விம்மி அழுகிருள், தள்ளிப் போகிருள். ஒரு பக்கமாக நின்று விம்மலை நிறுத்தி வெறித்து வெளியே பார்க்கிருள். வெளியே இருந்த கூட்டத்தின் பரபரப்பு அதிகரிக்கிறது. அவள் இரண்டு சகாக்களுடன் உள்ளே ஓடிவருகிருன். பெண் கவனிக்கிருள்.

வங்: இதோ இருக்கிருன் அவிசாரி மகன்!

மற்ருெருவன்: சரி, அறையைத் திற ஹாரி. (மூன்ருமவன் அறைக் கதவுக்குப் போய் பூட்டைத் திறந்து கதவை வீசித்திறக்கிருன்.)

ஒருத்தி: எங்கே அவன்! அவனை நான் பார்க்க வேண்டும். செத்தே போய்விட்டானு? (ஆட்கள் அவனை தூக்கும்போது அவனை பார்த்துக்கொண்டே, அவன் தான். யெ, அவனே தான். (அவள் கணவன் அவளை வெறுப்புடன் பார்த்துவிட்டு இறந்தவனை பார்க்கிருன்.)

வந்தவன்: (சிரிக்க முயற்சித்து) சரி—மேல் வேலையை முடிப்போம்.

மூன்ருமவன்: நீ சொல்கிறது சரி, ஜார்ஜ்! ஒரு கைகொடு ஹாரி. (பிணத்தை தூக்குகிருர்கள்)

பெண்: (திடீரென, ஆத்திரத்தோடு) அவனை கீழே வையுங்கள்!

வந்தவன்: என்ன இது?

இரண்டாமவன்: நீ என்ன செய்கிருய் இங்கே? ஏன் தெருவுக்குப் போகாமல் இருக்கிருய்?

பெ: அவனை கீழே வைத்துவிட்டு வெளியேறுங்கள், (அவர்களை நோக்கி ஓடுகிருள். அந்த பெண் பிள்ளை அவளை மறித்து பிடிக்கிருள்)

பெண்பிள்ளை: இந்தா—எதை நோக்கி போகிறதாக நினைக்கிருய் நீ?

பெண்: விடு என்னை. அவனை எடுத்துப்போக உங்களுக்கு உரிமை இல்லை.

(ஒருத்தி ஓடி வருகிருள்)

ஒருத்தி: சரி, இவள் சொல்கிருள், அதையா நீங்கள் கவனிக்கப்போகிறீர்கள்! (பெண்ணை அறைந்து தரைமீது தள்ளுகிருள்.) இந்த துப்புக்கெட்டவள் பேச்சை கேட்கப்போகிறீர்களா? (வாலிபன் உடலை தூக்கிக்கொண்டு எல்லோரும் போய்விடுகிருர்கள். பெண் மெதுவாக எழுந்திருக்கிருள், விம்மி அழவில்லை இப்போது. சுற்றி உள்ள எல்லாத்தையும் அவள் கூர்ந்து பார்க்கிருள். பிறகு நேர் எதிரே வெளியே பார்க்கிருள். ஓதிய குரலில்.)

பெண்: ஹல்லோ—யார்—அங்கே! ஹல்லோ யார் அங்கே!

தமிழில்: சி. சு. செ.

---

# சித்தக்கடல்

(112ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடந்து நடந்து என்கால்கள் சோர்ந்து களைத்து விட்டன. உடல் சோர்ந்தது; உள்ளம் ஓய்ந்தது. நான் மலைத்து நின்றேன்.

அப்போது எங்கிருந்தோ தென்றல் வந்தது. மெல்லிய பூங் காற்று மென்மையான பூவின் மணத்தைச் சுமந்து வந்தது.

சோர்ந்த உடல் சுறுசுறுப்படைந்தது: ஓய்ந்த உள்ளம் உற்சாகம் கொண்டது.

—அன்பே நீ யார்?

சந்தேகமும் சஞ்சலமும் நிறைந்த மனித உள்ளத்தின் அந்தகாரத்திலே அறிவுச் சுடர் பரவ வரும் ஞான சூரியனைப்போல நீ வந்தாய்.

இருண்ட வானத்தின் இருளை நீக்கி, குளுமை நிறைந்த ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சும் முழு மதியைப் போல் நீ வந்தாய்.

நீர் வற்றிக் காய்ந்து வாடும் பயிர் தலைதூக்கிச் செழித்துக் கொழித்துக் குலுங்க வரும் கார் மழை மழையைப் போல நீ வந்தாய்.

—அன்பே நீ யார்?

உடல் எல்லாம் புண்; உள்ளம் எல்லாம் ஏக்கம்; எண்ணம் எல்லாம் ஏமாற்றம்;

அன்று நீ வந்தாய்.

எழுந்தது உடல்; உயர்ந்தது உள்ளம் பறந்தது எண்ணம்.

—அன்பே நீ யார்?

வறுமையில் வாடும் ஏழைக்கு விருந்து: வலிய வந்தால்—?

பிள்ளைப் பேறுக்காக ஏங்கும் பேதைக்கு, ஏழெட்டுப் பிள்ளை பிறந்தால்—?

நாளும் சேற்றில் ஊறி உழைக்கும் உழவனுக்கு, பூமி பொன்னய் விளைந்தால்—?

—அன்பே, என் உள்ள நிறைவை ஒருவாறு சொல்லலாம்.

---

குறிப்பு:—கோலன் ( : ) நிறுத்தக் குறியின் புது உபயோகம்.

க (Ka) — :க (Gha)
ச-வுக்கு — ஜ இருக்கிறது
ட (Ta) — :ட (Da)
த (Tha) — :த (Dha)
ப (Pa) — :ப (Ba)

# இலக்கியத்தில்

(100ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொது சம்பந்தம், முக்யத்துவம் கொண்டவையா என்று நான் சில சமயம் பிரமித்தேன். அவை மற்றவர்களுக்கும் இருந்ததா என்றும் திகைத்தேன். ஏனெனில் யாரும் அவைப்பற்றி பேசவில்லை; அவற்றை வெளியிடவும் முயலவில்லை; அவை இருந்தன என்பதை அறிந்தவர்களாகவும் தெரியவில்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு :டாஸ்ட்வ்ஸ்கியின் கதை ஒன்றிலிருந்து ஆக்கப்பட்ட ஒரு நாடகத்தை பார்த்தேன். வீடு திரும்பியதும் கதையை படித்தேன். பின்வரும் பகுதியை கண்டுபிடித்தேன்.

'முழு விவகாரத் தகவல்களும் சில சமயம் நம் மூளையில் ஒரேசமயத்தில் குறுக்கோடுவது நமக்குத் தெரியும். அவை புலனுணர்வு உருவத்தில் இருக்கும். மனித பாஷையில் அவை ஒருபோதும் மொழி பெயர்க்கப்பட்டதே இல்லை. இலக்கிய மொழியில் இன்னும் குறைவாக. இந்த புலனுணர்வு (Sensations)களில் பலதை சாதாரண பாஷையில் மொழி பெயர்த்தால் நடக்கவே கூடாதவையாகத்தோன்றும் நம்பவும் முடியாததாக என்பது நன்றாகத்தெரிந்தது தான். அதனால்தான் வெட்டவெளிச்சத்தில் அவை தோன்றுகிறதில்லை. ஆனாலும் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது.' 'டிராபிஸம்கள்' என்று நான் பெயரிட்டு உணர்த்த விரும்பும் இந்த இயக்கங்கள் இருக்கிறதே இவைகளுக்கு சிறந்த வரையறை விளக்கமாக இதை சிறந்ததாக கொள்ளலாம். இந்த இயக்கங்கள், அசைவுகள் மறைந்து இருப்பவை. பட்டப்பகலில் அவை வெளித் தோன்றுவதில்லை. இவைகளை அனுபவிக்கிறவனும் தன் மனப் பேச்சு மூலமும் வெளியிடப்படுவது அபூர்வம். சகஜப்போக்கான, ஆபத்து இல்லாத தோற்றங்கள், பழசாய்ப் போன, சப்பையான சம்பாஷணைகள், தினசரி சமிக்ஞைகள் இவைகளுக்குப் பின்னால் அவை ஒளிந்து கொண்டிருக்கின்றன. சப்பைச் சொற்களுக்குப் பின்னால் மறைந்து இருக்கின்றன. அவைதான் வாழ்க்கையின் ரகசிய துடிப்புகள் என்று எனக்குத் தோன்றியது. அந்த ஒன்றில்தான் என் அக்கறை எல்லாம். என் நூல்களை படிப்பவர்கள் அவைகளில் மட்டுமே அக்கறை கொள்ள வேண்டும் என்று நான் விரும்பினேன். வேறு எதுவும் அவர்கள் கவனத்தை அவைகளிலிருந்து திருப்பக்கூடாது.

இந்த இலக்கியங்களின் விறுவிறுப்பான வளர்ச்சிப் போக்குதான் கதையம்சத்துக்கு பதிலாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன். இந்த டிராபிஸம்களை அவ்வப்போது தற்செயலாக சுமந்து செல்பவர்களைத் தவிர வேறு யார் இந்த கதாபாத்திரங்கள்? எனவே இந்த டிராபிஸம்தான் என் நூல்களின் மையக் கருத்தாகவும் இயக்கும் சக்தியாகவும் இருந்தது. ஆனால் நான் எழுதும்போது, இந்த டிராபிஸம் இன்னும்கூட்டுக்கலப்பானதாக வளமானதாக இருக்கக்கூடும் வேறு பல டிராபிஸம்களைக் கொண்டு அதை தயாரித்தால் என்று பட்டது எனக்கு. இந்த சின்ன ஒரு பக்க, இரண்டு பக்க கதைகளை—அவ்வொவ்வொன்றிலும் ஒரு டிராபிஸம் இருந்தது—எழுதும்போது, மறுபடியும் ஒருதரம் எழுத ஆரம்பிக்கும் போது எனக்கு கஷ்டமாக இருந்தது. ஒரு புதுக் கதையையே முழுக்க நான் எழுதவேண்டி இருந்த மாதிரி ஏற்பட்டது. இந்த டிராபிஸம்கள், அவை பல்வேறு காட்சிகளில் மெதுவாக வளர்வதை தொடர்ந்து சென்று, பிறகு ஒரு இறுதிக் காட்சியில் அவைகளின் கூட்டுக்கலப்பு, முழுச் செழுமை பொலிய அவைகளை விரித்துக் காட்டுவது என் விருப்பம்.

'தெரிய வராத ஒரு மனிதனது சித்திரம்,' என்ற என் நாவலின் கதைக் எனக்குத் தோன்றியது. :பால்ஸாக்கின் நாவல் 'யூஜினி கிராந்தே' மாதிரியான கதை இல்லை. :பால்ஸாக்கின் பெரும் நூலுடன் போட்டி போட நான் விரும்பவில்லை. ஆனால் யதார்த்தத்தைப்பற்றி நாம் இன்று அறிந்திருப்பது :பால்ஸாக் காலத்திலிருந்து மாறி இருக்கிறது. என் நாவலில் மரபான நாவல்களில் தோன்றுகிற படியேதான் கதாபாத்திரங்கள் வெளியே இருந்து தோன்றுகிறார்கள். தகப்பன் கஞ்சன், தன்னயக்காரன். பெண் ஒரு பித்துக்குளி கன்னிக்கிழவி. இது தான் ஜனங்கள் அவர்களைப்பற்றி பேசினது. ஆனால் அதன் உண்மை அர்த்தம் என்ன? ஒரு தன்னயக்காரன், கஞ்சன் என்று முத்திரை போடும்படியாக எந்தவிதமான இயக்கங்கள் கூடிச் சேர்ந்து உருவாகி இருந்தன. மேல்மட்டத்தில் என்ன தோன்றியது? ஒருவனை மற்றவர்கள் கஞ்சன் என்று சொல்கிறபோது ஒருவனுக்குள் என்னவிதமான டிராபிசம்கள் உள்ளோடுகின்றன? என் நாவலில் நான் என்று ஆரம்பித்து கதை சொல்லுபவன் அறிந்து கொள்ள விரும்பியது இதுதான். இந்த இயக்கங்களை அங்கங்கே பிடித்து அவன் பற்றிக்கொண்டான். அவை போகப் போக கூட்டுக் கலப்பாயின. இறுதியில் ஒரு உச்சநிலையில வந்து நின்றது. ஆனால் எல்லையற்ற கூட்டுக் கலப்பான யதார்த்ததை பிடித்துக் காட்ட கதை சொல்லி பெரும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டி இருந்த காட்சி அமைப்பு அவன் சக்திக்கு மீறி கடினமானதாக இருந்தது. சாதாரண வெளிபபுற வாழ்க்கையிலும், அந்த வாழ்க்கையை சித்தரிக்கும் நாவல்களிலும் வரும் ஒரு வலுவான வெளிப்புற செய்கை, காரியம் இந்த உள் மறைவான இயக்கங்களை எல்லாம் சட்டென நிறுத்திவிடுகிறது. பிறகு ஒரு மரபான நாவல்களில் வருவது போன்ற ஒரு சாதாரண கதாபாத்திரம் தோன்றுகிறான். அவனுக்கு பெயர், தொழில் எல்லாம் உண்டு. மரபான நாவல்களில் வருபவர்கள் போல பேசுகிறான். பிறகு அவன் பாதிப்பால் எல்லாம் கிரம

---

**திருத்தம்**

பக்கம் 110ல் 'நீயும் நானும்' என்பதுக்கு பதில் 'கவி நினைப்பு' என்ற தலைப்பும், 112ல், 113க்கு பதில், 116ஆம் பக்கம் பார்க்க என்றும் இருக்க வேண்டும்.

மாக ஆகிவிடுகின்றன. டிராபிஸம்களும் உள் அடக்கின சில இரைப்புகளுக்குப் பிறகு ஓய்ந்துவிடுகின்றன. இறந்தவர்கள் முகத்தில் தோன்றுகிற பூரண நிதானம் எல்லாத்துக்கும் ஏற்பட்டு விடுகிறது. என் அடுத்த நாவலையும் மரபான வழியில் எழுதினேன். ஆனால் முந்தினதில் கடைசியில் வருபவர் டிராபிஸம்களை நிறுத்திவிட்டார். இதில் வருபவர் தானே சிதறி அழிந்துவிடுகிறார்.

அடுத்த நாவலில் உரிமை பெற்ற கதைசொல்லி யாரும் இந்த டிராபிஸம்களை பிடித்து சொல்ல முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. ஒவ்வொருவரும் அவைகளை உணர்கிறார்கள். அவைகளால் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் இங்கு என் முந்தின நூல்களைவிட அதிக கஷ்டங்கள் எனக்கு ஏற்பட்டன. நான் ஒரு கதாபாத்திரத்தைப்பற்றி குறிப்பிடும்போது எந்த பாத்திரத்துக்கும் பெயர் கிடையாது. என்ன நடக்கிறது என்று வாசகனுக்கு விளக்க கதை சொல்லியும் கிடையாது. பெயர்களோ, குலப் பெயர்களோ பெயரிட்ட பெயர்களோ கதாபாத்திரங்களுக்கு கிடையாது — அவர்கள் மற்றவர்களைப் பற்றி பேசுகிற சமயங்களில் தவிர, அவர்கள் ஒருவரை யொருவர் பெயர் சொல்லி அழைக்கிறார்கள். இப்படி என் நூல்களில் பெயர்கள் இல்லாமல் இருப்பது, நவீனமாகவோ, கஷ்டமானதாகவோ, புரியாமலோ செய்ய வேண்டும் என்ற விருப்பத்தினால் அல்ல. அவசியத்தால் மட்டும் ஏற்பட்டது அது. சில சமயம் 'அவள்,' 'அவன்' என்று பெயருக்கு பதில் சொல்ல முயற்சித்து இருக்கிறேன். அப்போது அந்த இடத்தை விட்டு பிரக்ஞையின் எல்லை விளும்பிலே இயங்க சாத்யமாகி இருப்பதை நான் கண்டறிந்தேன். அங்கே தான் இந்த டிராபிஸம்களை நன்றாக கவனிக்க முடியும்.

பெயர்கள் சொல்லப்படாததால் ஒரு வேகமாகத் தோன்றும் ஒரு படிமத்தை நாம் பார்க்கிறோம். சுட்டாத, குறியாத ஒரு உருவத்தை பார்க்கிறோம். சமூகம் சம்பந்தமாக ஒரு நிலையிலும் நான் பார்க்க முடிந்தது. நான் சொன்னதுபோல் ரசமான கதாபாத்திரங்களை — மாடம் டுஸ்ஸாண்டின் மெழுகுவர்த்தி பொம்மைகளைப் போன்றவைகள்— உருவாக்க நான் விரும்பவில்லை. வாசகன் இந்த உள் இயக்கங்களை உணரவேண்டும், இந்த டிராபிசம்களையும்தான். அவைகளில் மனதை முனைக்கவிட வேண்டும். இந்த டிராபிஸம்கள் யாருக்குள் உளைகின்றனவோ அந்த நபர்களிடம் அதிக அக்கறை கொண்டுவிடக்கூடாது இந்த உள் இயக்கங்களின் சுழலில் வாசகன் அகப்பட்டு இழுத்துச் செல்லப்பட வேண்டும். சிலசமயம் தான் எங்கே இருக்கிறோம் என்று உடனே தெரியும்; சிலசமயம் கொஞ்சம் கழித்து தெரியும்; சில சமயம் தெரியாமலே இருந்துவிடக்கூடும். இது முக்யமானது இல்லை. இந்த உள்ளோட்ட, ரொம்ப நுட்பமான விருவிருப்பு நிகழ்ச்சிகளின் தகவல் மேல்மட்டத்தில் தெரிவதற்கு உபயோகமாக ஆவதே தவிர சம்பாஷணைகள் வேறு எதுக்கும் இல்லை. சம்பாஷணைகள் இவைகளால் கட்டுப்படுத்த பட்டிருக்கின்றன. இந்த விருவிருப்பு நிகழ்ச்சிகளிலிருந்துதான் அவைகள் குறிப்பர்த்தம் பெறுகின்றன. அவை பிரக்ஞையின் எல்லைக்கோட்டிலிருந்து தோன்றும் கணம் முதல் சம்பாஷணை உருவில் மேல்மட்டத்தில் தோன்றுகிற கணம் வரை வாசகர்கள் அவைகளை தொடரவேண்டும். ஒவ்வொரு சம்பாஷணையும் உப-சம்பாஷணைகளால் தயாரிக்கப்படுகிறது.

தான் சாதிக்க முயன்றிருப்பதை ஒரு எழுத்தாளன் விளக்குவது சிரமம். அவன் வெற்றி பெற்றானா இல்லையா, அது வேறு கேள்வி. தீர்மானிக்கவேண்டியது அவன் இல்லை. பிரௌனிங் சொன்னான். 'சாதனை நாட்டத்தில்தான் இருக்கிறது' என்று. நிச்சயமான விஷயம் என்னவென்றால் ஒரு நாட்டம், தேட்டம் இருந்தது, அது மனப்பூர்வமான நிஜமான அனுபவத்தின் அடிப்படையில் அமைந்தது என்பது தான்.

புதிய முறைகள் என் காரியத்துக்கு பயன்பட்டவை; அதற்குமேல் அவைகளுக்கு வேறு மதிப்பு எதுவும் கிடையாது — என் நூல்களை ஆக்கின; என் போன்றவர்களது நூல்களையும்தான். அவை அசாதாரணமானவையாக தோன்றுகின்றன — நாவலுக்கு எதிரிடையானவைகளாக, சோதனை நாவல்களாக. படி. ஆனால் இதைமட்டும் நினைவில் கொள்ள வேண்டும். எந்த காலத்திலும் நாவல்களும் சரி, வேறு புது கலைப் படைப்புகளும் சரி, தங்களைச் சுற்றி பரவியுள்ள, நடப்பில், புழக்கத்தில் இருந்து வரும் மரபான நூல்களின் தோரணைகளிலிருந்து மாறுபட்டவை விசித்திர பிறவிகளாகத்தான் தோன்றி இருக்கின்றன.

---

**த க வ ல்**

ராமனாதபுரம் ஜில்லா வத்திராயிருப்பு புதுமைப்பித்தன் விழாக் குழுவினர், 2-7-61ல் நடைபெற இருக்கும் விழா நிகழ்ச்சிகளில் ஒன்றாகபுதுமைப்பித்தன் நினைவுப் போட்டி ஒன்று வைத்திருக்கிறார்கள்.

உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மட்டும்: கவிதைப் படைப்பில் புதுமைப்பித்தன் தமிழில் செய்துள்ள புதுச் சோதனை முறையைப் பின்பற்றி கவிதைஒன்று வரைக அல்லது புதுமைபித்தன் சிறுகதை ஒன்றை அதன் மையக் கருத்து சிதையாமல் நாடகமாக்குக!

மற்ற அனைவருக்கும்: புதுமைப் பித்தன் சிறுகதைகளின் உருவம், உள்ளடக்கம் ஆகியவற்றை வழிகாட்டியாகக் கொண்டு சிறுகதை ஒன்று எழுதுக அல்லது புதுமைப்பித்தன் படைப்புக்களின் நடை, சொல்லாட்சி, பாத்திரங்களின் நிறை—குறை ஆகியவற்றின் தனித்தன்மை பற்றி ஒரு திறனாய்வுக் கட்டுரை வரைக.

கட்டுரைகள் மே மாதம் 31ம் தேதிக்குள் நூலகர், மாவட்டக் கிளை நூலகம், வத்திராயிருப்பு ஸ்ரீவில்லிபுத்தூர் (வழி), ராமனாதபுரம் ஜில்லா என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். மாணவர்கள் மட்டும் ஆசிரியர் கையொப்பத்துடன் அனுப்ப வேண்டும்.

# புத்தகங்கள்

## அக்கரைச் சீமையில்

சுந்தர ராமசாமியின் பத்து கதைகள் கொண்ட முதல் சிறுகதை தொகுதி இது. 1950 முதல் 60 வரை உள்ள ஒரு பத்து ஆண்டுக் காலத்தில் திறமை அறிகுறி காட்டி, வளர்ந்து, வெளித் தெரியவந்திருக்கும் விரல் விட்டு எண்ணக்கூடிய சிறுகதை ஆசிரியர்களில் ஒருவர் அவர். கதைகளின் உள்ளடக்கத்தை எடுத்துக்கொண்டு பார்ப்போம். முதல் கதை, அக்கரைச் சீமையில் 'ஆப்ரிக்காவுக்கு பிழைப்புக்குச் சென்றவன் அங்கு நிலைத்து வயிற்றைக் கழுவ முடிந்தும் கூட பிறந்த 'மண்ணிலே தான் சாவணும் ஸார்' என்று சுமந்து செல்லும் ஒரு ஏக்கத்தின், நாட்டுப்பற்றின் வெளியீடாக இருக்கிறது. 'அடைக்கலம்' என்கிற கதை இன்றைய, தன் குடும்பத்தின் புது மோஸ்தர் நாகரிகத்தை விழுங்க முடியாமல் தவித்த ஒரு ஆசார சீல பழங்கால பாட்டி 'மனுஷாள் விதரணை கெட்டுப்போய்விட்டால் ஊர் என்ன செய்யமுடியும்' என்று தன்னையே கேட்டுக்கொண்டு டில்லியை விட்டு தன் கிராமம் திரும்பியவள்—அவள் தன் மனிதர்களிடம் வெறுக்கும் நாகரீகத்தின் முழுச் சின்னமாக இருந்த ஒரு 'துரைச்சானி'யை 'அடியே, உன்னைத்தாண்டி! நானும் ஒரு நாழியாப் பாத்துண்டு இருக்கேன். நட்டு வச்சமரம் கணக்கா நிக்கறியே! ஒரு ஜீவன் வயத்திலே தொங்கறது என்கிற நெனப்பில்லையோ? இதோ பாரு! சமத்தா இப்படி உட்காரு' என்று அழைத்து, ஒட்டுத் திண்ணையில் தன்னை இடித்தபடி அவள் உட்கார, தான் திண்ணையில் ஒட்டிக்கொண்டு உட்காருகிறாள். மனிதாபிமானம் தொனிக்கும் இந்த கதை வெகு நன்றாக அமைந்திருக்கிறது.

'முதலும் முடிவும்' என்ற கதை, பெரியவீட்டில் தான் இருப்பேன் என்று குழந்தையாக அடம் பிடித்தவள் தான் எதிர்பார்த்த விதமாக இல்லாமல் வேறு விதமாக சொந்தக்காரியாக ஆன வாழ்க்கைபற்றிய ஒரு இளிவரலான (ஐரானிகல்) நிலையை உணர்த்துவது. 'பொறுக்கி வர்க்கம்' என்கிற கதை எச்சிற் கலைக்கு ஆசைப்பட்ட வேகத்தில் சிறு தவறு செய்யப்போய் ஹோட்டல் முதலாளி மகனால் அடித்துத் துன்புறுத்தப்பட்ட பொறுக்கி, துடிதுடித்து கதறின நிலைமையிலும், கூட்டத்தினரால் நியாயம் பேசப்பட்டு முதலாளியின் மகன் மன்னிப்புக் கேட்க நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறதிலே சிரிக்கிறான் என்கிற வர்க்கத் திமிரை அடக்கும் கருத்தைக்கொண்ட பொருளாதார ஏற்றத்தாழ்வுபற்றியகதை. அடுத்த கதை 'தண்ணீர்' என்பதும் தங்கள் பயிர் சாய, நாங்கள் கடவுளை ஏதுக்கலெ! தண்ணி தெய்வத்துக்குப் போகக்கூடாதுன்னும் நாங்க சொல்லலெ. எங்கே போகுதுங்கிறதெப்பத்தி எங்களுக்கு அக்கறை இல்லெ. எங்களுக்கு இல்லாம போகுது—அதுதான் விஷயம்' என்று வாதித்து தெப்ப விழாவுக்கு போக இருந்த தண்ணீரை உடைத்துக்கொண்டு போகிற போது நாஸ்திகம் பேசவில்லை; வயறு பேசுகிறது.

'உணவும், உணர்வும்' வயிற்றுத் தீ சம்பந்தமானது தான். 'கோவில் காளையும், உழவு மாடும்,' என்கிற கதையில்' தண்ணியெ பூராவும் குடிச்சிட்டியே. பாவிப் பயிலெ' என்று குழந்தையை தாய் அடித்ததைப் பார்த்த ஒரு நாடோடி கிழவன் வயது சரிய இருந்தவன்—தன்னை வீர்வராக் காட்டில் மனிதாபிமானியாக தான் ஒருவனுகவே கிணறு தோண்டி முடிகிறபோது இரண்டு முடிவுகள் சேர்ந்து நிகழ்கின்றன. 'கைக்குழந்தை' சுயமாக நடந்துகொள்ளத் தெரியாது மனைவியின் கைக்குழந்தையாக இருக்கும் ஒரு கணவனைப் பற்றியது. ஒரு லேசான சித்திரம்.

'அகம்' கதை தாயின் பிசகு நடத்தையை உள்ளுணர்வாக உணர்ந்து, அதற்கு காரணமானவனை பழி வாங்க முற்பட்ட குழந்தையின் மனேதத்துவத்தை பற்றியது. 'செங்கமலமும் ஒரு சோப்பும்' வேலைக்காரிக்கு நாகரீகம் சொல்லிக்கொடுத்து சுத்தமாக அவள் இருப்பதை பரீட்சிக்கப்போய் தான் ஒரு ரசமான சிக்கலில் அகப்பட்டுக் கொண்ட ஒரு கிருமி ஆராய்ச்சி பட்டதாரியைப் பற்றியது.

இந்த பத்துக் கதைகளும் ராமசாமிக்கு பல விஷயங்களில் இருக்கிற அக்கறையை காட்டுகின்றன. அவருக்கு கவனிப்பு இருக்கிறது. வர்ணிக்கத் தெரிகிறது. பார்வை இருக்கிறது. சிறுகதை உருவமும் பிடிபட்டிருக்கிறது. 'துரைச்சானியின் 'தலைமயிரின் வனப்பைக் கண்டதும் ஆசையாக இருந்தது பாட்டிக்கு. தாழம்பு வைத்துப் பின்னிவிட வேண்டும் போலிருந்தது. கழுதை! குதிரை வால்மாதிரி வெட்டி விட்டுக் கொண்டிருக்கிறதே. எப்படித் தான் மனசு வருமோ!' பாட்டி 'வார்த்தையாக வரும் நல்ல கவனிப்பு. 'புடவைகள் இரண்டு இணை சேர்ந்த பாம்புகள் மாதிரி முறுக்கிக்கொண்டு...! 'நொங்கு மாதிரி உருண்டை முகம்' 'குடமிளகாய் மூக்கு' படிமப் பிரயோகம் வர்ணிப்பில். 'ஆப்ரிக்காவையே திருடித் திங்கறவன் நான் வளர்த்த பொகையிலையைத் திருடினேன்னு அடிக்கிறான்.' அடிப்படையாக தாக்கி விழும் கருத்துப் பார்வை.

இந்த பத்துக் கதைகளும் பிரமாதமானவை என்று சொல்வதற்கில்லை. இருந்தாலும் 'அக்கரைச் சீமையில், அடைக்கலம், செங்கமலமும் ஒரு சோப்பும், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவை. கதைகள் வெளியான சமயமும் புத்தகத்தில் காண்கிறது. அதைக்கொண்டு வரிசைப்படுத்திப் பார்க்கிற போது 'முற்போக்கு' என்று கருதப்படும் பொருளாதார அடிப்படைப் பிரச்னையைக்கொண்ட முந்தின கதைகளான 'பொறுக்கி வர்க்கம்,' 'தண்ணீர்,' 'உணரவும் உணர்வும்' இவைகளுக்குப் பிறகு வந்த கதைகளில் போக்கு மாற்றம் தெரிகிறது. மேலே குறிப்பிட்ட மூன்று கதைகளும் பச்சையாக, அப்பட்டமாக, பிரச்னையை முன் கொண்டுள்ளவையாக இருப்பதால் வேகம் இருந்தாலும் கலையழகு வீழ்ந்து இருக்கிறது அவைகளில் கற்பனை போதிய அளவு தொனிக்கவில்லை. உருவாகவில்லை. 'அகம்' கதை உக்ரமாக வந்திருக்கிறது. உத்தி முறையில் சோதனை இருக்கிறது. இருந்தாலும், நமது சமுதாயத்தில் நிகழலாம் என்றாலும், நடத்தையும், பேச்சும் கருத்தும் வெளி மணம் வீசுவதாக இருக்கிறது. குழந்தை கண் விழிக்காமல் அவதிப்படுகிறபோது தாயைப் பார்த்து, கள்ள—உறவுக்காரன் 'வா மாடிக்கு கெஞ்சிக் கொண்டிருக்க வேண்டுமோ உன்னிடம்? ரொம்ப உத்தமிதான். தெரியும்' என்கிற பச்சையான வாக்கியமும் பின் நடந்த அப்பட்டச் செயலும் கதாரசனைக்கு ரொம்பவும் பங்கம் விளைவிப்பது. நாசுக்காக உணர்த்தப்பட்டிருக்க வேண்டியது.

# எழுத்து புத்தக சங்கம்

‘எழுத்து புத்தக சங்கம் ஆரம்பித்தீர்களே. நான் அதில் ஒரு உருப்பினராக சேர்வதாக கூறி இருந்தேனே. அதுக்குப் பிறகு அது சம்பந்தமாக கடிதம் தகவல் எதுவும் இல்லையே என்று அன்பர்கள் பலர் எழுதி கேட்கிறார்கள் உண்மை செய்ய வில்லை தான் ஒரு ஐம்பது பேர்கள் சேரட்டும் என்று காத்திருந்தோம். இப்போது அந்த தொகையை கிட்டதட்ட எட்டியாகிவிட்டது. எனவே இனி ‘எழுத்து’ மூலமாக வும், கடிதம் மூலமாகவும் அன்பர்களுடன் அடிக்கடி தொடர்பு கொள்ள முடியும்.

சமீபத்தில் சந்தித்த தமிழ் நாட்டு எழுத்தாளர் ஒருவர் கேட்டார், ‘எழுத்து’ மூலம் ஒரு நூறு, இருநூறு இலக்கியத்தரமான நூல் வாங்குவோர்களை காண முடி கிறதா என்று. எழுத்து புத்தக சங்க முயற்சி எடுத்துச் சொல்லப்பட்டபோது அதை வளர்க்கும்படி ஆதரவான ஆலோசனை கூறினார். அன்பர்கள் தொகை ஒவ்வொன்றாக சேர்ந்தாலும் பெருகும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அன்பர்களுக்கு சில தகவல்கள்.

‘எழுத்து’வில் எல்லா நூல்களின் பட்டியலையும் தர இயலாது. எனவே அன்பர்கள் தாங்கள் விரும்பும் நூல்களைப் பற்றிய தகவல் வேறு இடங்களிலிருந்து கிடைத்ததைக் கொண்டு எழுதலாம்.

2. ஒவ்வொரு புஸ்தகமாக சிலர் விரும்புகிறார்கள். தபால் செலவு அதிகம் ஆகும் எனவே ஒரு ஆர்டர் குறைந்தது ரூ. 5-00 க்கு குறையாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்வது நல்லது. ஐந்து ரூபாய் பெறுமானம் உள்ள இரண்டு நூல்களுக்கு ஒரே சமயம் ஆர்டர் கொடுக்கலாம்.

3 பிரசுர காரியாலயங்கள் சென்னையின் பல பகுதிகளிலும் இருப்பதால் புத்தகங்களை சேர்த்து வாங்கி அனுப்புவதில் சில சமயம் கொஞ்சம் தாமதம் ஏற்படக் கூடும். அதற்கு மன்னிக்கவும்.

4. பின்வருமாறு, உள்ள ரகங்களில் எந்த துறை நூல்கள் தங்களுக்கு வேண்டும், அது சம்பந்தமான நூல்கள் இதுவரை என்ன வந்திருக்கின்றன என்ற தகவல்கள் வேண்டும் என்று எழுதிக்கேட்கலாம்.

1. கவிதை
2. சிறுகதை
3. நாவல்
4. நாடகம்
5. இலக்கிய விமர்சனம்

5. வி. பி. பி. யில் அனுப்பவும், அல்லது மணியார்டர் செய்திருக்கிறேன் என்ற தகவலையும், புத்தகம் பற்றிய முழு விவரங்களுடன் எழுதவும்.

6. இதுவரை மேற்கண்ட துறைகளில் வெளியாகி உள்ள நூல்கள் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. அன்பர்கள் தங்களுக்கு தெரியவந்துள்ள நூல்களை, நூல், ஆசிரியர், பிரசுர நிலையம் பெயர்களுடன் தெரிவிக்கவும்.

7. மொழி பெயர்ப்பு நூல்களுக்கும் எழுதலாம். மொழி பெயர்ப்பு நூல் பட்டியல் ஒன்றும் தயாரிக்கப்படும்

எழுத்து வாசகர்களில் இன்னும் பலர் புத்தகங்கள் வாங்குவோர் இருக்கிறார்கள். அவர்களும் சங்கத்தில் சேர்ந்து அது பெருகச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

*முகவரி :* எழுத்து புத்தக சங்கம்

**EZHUTTHU PUTTHAKA SANGAM**

19-A, Pilliar Koil Street, Triplicane, Madras-5.

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa from 19-A, Pilliar Koil Street, Triplicane, Madas-5.
Printed by M. Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane, Madras-5.